# ஏ, தாழ்ந்த தமிழகமே!



## அறிஞர் அண்ணா

# நிலையும் நினைப்பும்

ஏ•தாழ்ந்த தமிழகமே

அறிஞர் அண்ணா

# Contents

[நிலையும் நினைப்பும்]

[ஏ, தாழ்ந்த தமிழகமே!]

# நிலையும் நினைப்பும்

அன்புள்ள தலைவர் அவர்களே!
அருமைத் தோழர்களே!!

இந்தத் தொடக்கவிழாச் சொற்பொழிவை நான்தான் ஆற்ற வேண்டும் என்று கேட்ட போது, 'நான் சிலகாலமாக அதிகமாக எந்தப் பொதுக்கூட்டங்களிலும் பேசுவதில்லை; ஆகவே, இந்தக் கூட்டத்திற்கும் வர இயலாதவனாயிருக்கிறேன்' என்று கூறினேன். ஆனால் எனது மாணவ நண்பர் மதியழகன் நான் வரத்தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்தார். நான் யோசித்தேன். சரி என்று சம்மதம் தந்தேன். காரணம் நான் இந்த விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றுவதன் மூலம் ஒரு சில சந்தேகமான பிரச்சனைகள் – அதுவும் என்னைப்பற்றிச் சிலர் கொண்ட சந்தேகமான பிரச்சனைகள் - தீரும் என்பதேயாகும்.

நான் பேச ஒப்புக்கொண்டு கொடுத்த தலைப்பு, 'நிலையும் நினைப்பும்' இன்று இந்தத் தமிழ்ப் பொதுப் பேரவையின் தொடக்கவிழாவுக்குத் தலைமை வகிக்க இருந்த துணைவேந்தர் இரத்தினசாமி அவர்கள் சென்னைக்குச் சற்று அவசர வேலை காரணமாகச் சென்று விட்டதால் நண்பர் மதியழகன் தலைமை
வகிக்கிறார். சென்னைக்குச் சற்று அவசர வேலை காரணமாகப் போகாமல் துணைவேந்தர் அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை வகித்திருந்தால் என் நினைப்பு கட்டுப்படும் நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் நண்பரின் தலைமையில் அந்தக்கட்டு தளர்த்தப்பட்டிருக்கிறது. நினைப்பை வானலோகம் வரை சஞ்சரிக்கவிடலாம். பல்கலைக் கழக விதியை மீறி அன்பு காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எனது சொற்பொழிவின் மூலம் சர்க்கார் இப்பொழுது சிந்தனைக்கு இட்டிருக்கும் கட்டுப்பாட்டைக் குலைத்துவிடுவேன் என்றோ, அல்லது எனது அரசியல் கருத்தை உங்கள் சொந்தமான கொள்கைக்கு மாறாக மனத்திற்குள் புகுத்திவிடுவேன் என்றோ ஐயப்படத் தேவையில்லை. யார் ஐயங்கொண்டாலும், அச்சங்கொண்டாலும் தமிழ்ப் பொதுப் பேரவையின் உறுப்பினர்களாகிய நீங்கள் அஞ்சமாட்டீர்கள் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு. இந்தத் தமிழ்ப் பொதுப் பேரவைப் பேச்சு மேடையை அரசியல் மேடையாக்கி வகுப்பு வாதத்தை வாதத்துக்கழைத்து நாட்டுப் பிரிவினையைப் பற்றிப்பேசித் தொடக்க விழாவை நாட்டுப் பிரிவினை நாளாக மாற்ற வேண்டும் என்ற நிர்பந்தத்தில் இல்லாதவன். கொஞ்ச நாளாக அரசியலிலேயே அலுப்புத்

தட்டியவன் நான். அலுப்புக்குக் காரணமான அரசியலை உங்கள் அச்சத்துக்குரிய பொருளாக மாற்றமாட்டேன். சர்க்காரே சிந்தனைக்குத் தடை விதித்தாலும் நமது கனம் கல்வி மந்திரி அவினாசிலிங்கம் அடிக்கடி தமது சொற்பொழிவிலே "அச்சம் தவிர்" என்ற அட்சரத்தை ஓதி வருகிறார்.
பல்கலைக்கழகம் உங்களுக்கு அளித்திருக்கும் இலச்சினையில் **"With Courage and Faith"** என்ற வாக்கியம் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் "அச்சம் தவிர்" என்று போதனை புரியும் அவினாசியார் ஆட்சியின் கீழ், தைரியத்தை (Courage) தனது ஒரு முக்கிய பண்பாக உடைய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயமறியாத பருவத்திலுள்ள நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை. "பயப்படக் கூடாது" அதுதான் பல்கலைக் கழகத்தின் பண்பாக இருக்க வேண்டும். பயந்தால் பல்கலைக் கழகத்தின் பண்பே பழிப்புக் கிடமாகும்; அது பண்பு உயர்த்தப்படவேண்டும் என்பதற்கு அறிகுறி. ஆனால், அதனால், உங்களுடைய உள்ளத்திலுள்ள கருத்துக்கள் எனது எடுத்துக்காட்டுகளால் மாற வேண்டு மென்பதல்ல. என்னுடைய கருத்துக்களை வாங்கி அறிவென்னும் உரைகல்லில் உரைத்து, சிந்தனைத் துலாக் கோலால் நிறுத்து, சரியா தப்பா என்று பார்க்க வேண்டும். சரியானதை ஒத்துக் கொள்ள வேண்டும்; ஒத்துக் கொண்டதை ஓம்ப வேண்டும். இது பண்புள்ளவர்கள் செய்யவேண்டிய கடமை; பல்கலைக்கழகம் வளர்க்க வேண்டிய பொருள். இது எனது சொந்தச் சார்பில் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிற நல்லுரை.

"நிலையும் நினைப்பும்" என்ற தலைப்பை உங்கள் தொடக்க விழாச் சொற்பொழிவுக்குத் தந்தபொழுது, நான் சிந்தித்துப் பார்த்தேன். இன்றைய என் நிலையும் நினைப்பும் மக்களது நிலையும் நினைப்பும், மக்கள் என்னைப்பற்றிக் கொண்ட நினைப்பும், நான்- மக்களைப் பற்றிக் கொண்ட நினைப்பும், நினைப்பால் மாறிய இருவர்களது நிலையும் - இப்படி நான் "நிலை" - "நினைப்பு" என்ற இரு தொடர்களையும் பொருத்திப் பார்த்தேன். எனக்கு விசித்திரமாகப்பட்டது. எனவே "நிலையும் நினைப்பும்" என்ற தலைப்பிலேயே சற்றுப் பேசலாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

ஒரு நாட்டின் நிலை அதன் நினைப்பை உருவாக்குகிறது. உன்னத நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு உயர்ந்திருக்கும்; தாழ்ந்த நிலையிலுள்ள நாட்டின் நினைப்பு தாழ்ந்திருக்கும். அதாவது நிலை உயர்ந்திருந்தால், நினைப்பும் உயர்ந்திருக்கும். நிலை தாழ்ந்திருந்தால் நினைப்பும் தாழ்ந்திருக்கும். நிலைக்கு ஏற்றபடி நினைப்பு

இருப்பதில்லை. மூன்றாவது அடுக்கு மேல் மாடியில் உலவுகிற தொழிலாளியின் நினைப்பு அவன் நிலை உயர்ந்திருக்கிற அளவு உயர்ந்திருப்பதில்லை. மூன்றடுக்கு மாடிவீட்டைக் கட்டிவிட்டு அவன் தாழ்ந்த குடிசைக்குள் குனிந்து நுழையும்பொழுது, "அவன் பிறந்த வேளை மாளிகையில் வாழுகிறான்; நாம் வந்த வேளை குடிசையில் வாழுகிறோம்" என்றுதான் எண்ணிக்கொண்டு நுழைவான். மூன்றாவது அடுக்கு மாடியில் நல்ல பொம்மைகள் அமைப்பான்; அந்தப் பொம்மைகளை அழகுப்படுத்துவதில் வர்ண ஜாலத்தைக் காண்பிப்பான். பொம்மைகள் கலைத் திறனைப் பேசுகிற அளவுக்குத் தன் கைத்திறனை எல்லாம் செலவழிப்பான். இவ்வளவும் செய்துவிட்டு அவன் பேசாமல் குடிசைக்குள் குனிந்து செல்லுவான். தான் ஏன் மாடி வீட்டில் வாழக் கூடாது – ஒரு நிமிடமேனும் அதைப்பற்றி நினைக்க மாட்டான். காரணம் மாடிகள் கட்டி, மாடி ஏறப்படிக்கட்டுகள் அமைத்து, படிக்கட்டுகள் வழியாக மாடி ஏறினால் மனதைக்கவர அழகான பொம்மைகள் வைத்து, ஆபத்துக்கிடையே வெய்யிலால் நெற்றியில் வழியும் வியர்வையைப் பார்க்காமல் கஷ்டப்பட்டுக் கட்டிடம் கட்டியும் கடைசியில் அந்த உப்பரிகையில் உல்லாசமாக உலவப் போகிறவன் சீமான்; அவனல்ல. இந்த உண்மையைத் தொழிலாளியும் அறிவான். மாடிப் படிக் கட்டுகளைக் கட்டும்பொழுது, அதன் வழியாக ஏறி உலவப் போகிறவன் வேறொருவன்; தானல்ல என்பதைத் தெரிந்து கொண்டுதான் கட்டுவான். நிலைக்கேற்ற நினைப்பில்லை. திருட்டுத் தனமாகக் கனிதேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு அவன் நினைப்பும் தாழ்ந்திருக்கும். முதலில் கனிபறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்துவிடுவானோ, வந்துவிட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன் பின் காய்களையும் பறிப்பான். கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும்பொழுதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும். அடிக்கடி தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்தால் எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்; இங்கும் நிலைக்கேற்ற நினைப்பில்லை. காரணம், எப்படி மூன்றாவது அடுக்கு மாடியில் உலவும் தொழிலாளிக்கு அந்த மாடி வீடு சொந்தமில்லையோ, அதுபோல மர உச்சியில் கனி பறிப்பவனுக்கும் அந்த மரம் சொந்தமில்லை.

இதேபோலத்தான் ஒரு நாட்டினுடைய நிலையும் நினைப்பும். ஒரு

நாட்டின் நினைப்பைப் பார்த்துதான் அந்நாட்டின் நிலை மதிப்பிடப்படும். மக்களுடைய நினைப்புகளின் மொத்தமே (கூட்டுத் தொகையே) ஒரு நாட்டின் நினைப்பாகும் என்பதை ஒருகணம் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். இப்பொழுது இந்தியா என்னும் துணைக்கண்டம் அதற்குரிய மக்களால் ஆளப்படுகிறது. இந்தியாவின் தலை விதியை நிர்ணயிப்பது இந்தியர்களே என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டை ஈடேற்றும் எந்தத் திட்டம் செல்வாக்குப்பெற ஆரம்பித்தாலும் அதற்கு எந்த ஆங்கிலர் தடைக்கல்லாய் இருப்பதாகச் சொல்லப்பட்டதோ, எந்த ஆங்கிலர் முட்டுக்கட்டையாக இருப்பதாகச் சொல்லப்பட்டதோ, எந்த ஆங்கிலர் எதிரியாக இருப்பதாகச் சொல்லப்பட்டதோ, அந்த ஆங்கிலர் இப்பொழுது ஆட்சியில் இல்லை. அந்நிய ஆட்சி மறைந்து தன்னாட்சி தோன்றியிருக்கிறது. நம்மை ஆளுவது நம்மவரே! பிற நாட்டாரல்ல!! இது நல்ல நிலை, நிலை உயர்ந்திருப்பதாகவே பொருள். ஆகையால் நியதிப்படி நினைப்பும் உயர்ந்திருக்க வேண்டும்.

மூன்றாவது அடுக்கு மாடியில் உலவும் தொழிலாளிக்கு அந்த மாடி வீடும், மர உச்சியில் கனி பறிப்பவனுக்கு அந்த மரமும் சொந்தமில்லாததால் அவர்கள் நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு தாழ்ந்திருந்தது. அவர்களே அவர்கள் கட்டுகிற வீட்டுக்கும், ஏறுகிற மரத்திற்கும் சொந்தக்காரர்கள் என்ற நிலை ஏற்பட்டிருந்தால் அவர்கள் நினைப்பும் உயர்ந்திருக்கும். இது நியதி. இப்பொழுது இந்தியா இந்தியருக்குச் சொந்தமாகி இந்தியாவை வறுமையாக்குவதோ, வளமாக்குவதோ இந்தியர் கையிலேயே இருக்கிறது. சொந்தமான நாட்டில் சுதந்திரமாக வாழும் நிலை ஏற்பட்டுவிட்டால், நினைப்பு இயற்கையாக உயர்ந்திருக்க வேண்டும். ஆனால் நாட்டின் நிலை உயர்ந்த அளவுக்கு நினைப்பு உயர்ந்ததாகத் தெரியவில்லை.

பொதுவான இந்தியா - குறிப்பாகத் தமிழ்நாடு தாழ்ந்த நினைப்பில் இருக்கிறது. எங்கும் சமாதானத்தைப் பற்றிச் சந்தேகம்! சுதந்திரம் கிடைத்தும் சுகம் கிடைக்குமா என்ற ஏக்கம்!! ஏன் இந்த இழிவான நினைப்புக்கள்? சந்தோஷத்திற்குப்பதில் அச்சம் ஏன்? தமிழ்நாட்டில் நிலை உயர்ந்திருக்கிறதா? முதலில் என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்; பிறகு உங்களைக் கேட்கிறேன். முன்னாளில் தமிழகத்தின் நிலை எவ்வாறிருந்தது? முன்னாளில் தமிழகத்தில் போர் என்றவுடன் வீரர்களின் புயம் வீங்கும்; அவர்கள் உள்ளம் கிளர்ந்தெழும். அரசர்கள் அன்பால் ஆட்சி செலுத்தினார்கள். அவர்கள் ஆட்சியில் இப்பொழுது உள்ளதைப் போலத் தரித்திரம் தாண்டவமாடியதில்லை.

தன மிகுதியால் தமிழர் பிறருக்குத் தானம் வழங்கினர். மொழி, கலை, நாகரிகம் பிற பிற நாடுகளில் இருந்ததைவிட சிறப்புற்றிருந்தன. ஒவ்வொருவரும் கட்டுமஸ்தான உடம்பைப் பெற்றிருந்தார்கள். அந்தச் செல்வம் நிறைந்த மகோன்னத காலத்தில் உள்ள தமிழ்நாட்டின் நினைப்புக்கும் - கலை, மொழி, நாகரிகம் பிற நாட்டுக்கு அடிமையாகி, செல்வம் சீரழிக்கப்பட்டு, மனிதர்கள் குகைக்குள் அடைபட்ட சிறுத்தையாகி, பேதா பேதத்தால் பிரிந்து ஒற்றுமையில்லாமல் வாழ வழியில்லாத நிலையில் இருக்கும் இக்கால நினைப்புக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. சங்க காலத்திலுள்ள தமிழ்நாட்டின்நினைப்புக்கு, இந்நாள் தமிழ்நாட்டின் நினைப்பு எவ்வளவோ தாழ்ந்திருக்கிறது. எனது வாதத்திற்குத் துணையாக அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பட்டினப்பாலை, தொல்காப்பியம் ஆகியவைகளைச் சாட்சிக்கழைக்கிறேன்.

இக்காலத்தில் உலவும் நாசத்தை விளைவிக்கும் நம்பிக்கைகளை அக்காலத்தில் காணமுடியாது. தமிழர் எண்ணம் பிறருக்கு அடிமையாகாதிருந்த காலத்தில் எப்படிக் காணமுடியும்? அகநானூறு, புறநானூறுகளில் எந்தத் தமிழ்நாட்டு மன்னனாவது போருக்குக் கிளம்பும்பொழுது, படை கிளம்பும் முன் யாகம் செய்தான் என்றோ, பரமசிவத்திடம் பாசுபதம் பெற்றான் என்றோ எங்கேயாவது பாடலுண்டா? அல்லது படை கிளம்பி எதிரிகளுடன் போரிடும்பொழுதாவது வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், மோகனாஸ்திரம், அக்கினியாஸ்திரம் ஆகிய அஸ்திரங்களில் எந்த அஸ்திரமாவது எதிரியை வீழ்த்தியபோது உதவியதாக எங்காவது பாடல் இருப்பதாகச் சொல்ல முடியுமா? பின் எப்படி போர் நடந்திருக்கும்? தமிழ் மன்னர்கள் வெற்றி பெற்றிருப்பர்? போர் என்றதும் வீரர்கள் கூடியிருப்பர்; பட்டாளம் அணிவகுக்கப்பட்டிருக்கும்; போர் முரசு கொட்டியிருப்பர்; வஞ்சிகள் கூடியிருப்பர்; பாணங்கள் தொடுத்திருப்பர்; தூதுவர் சென்றிருப்பர்; கொடி இறக்கப்பட்டிருக்கும்; அகழிகளை வெட்டியிருப்பார்கள்; வாய்க்கால்களைத் தாண்டியிருப்பார்கள்; ஆறுகளை நீந்தியிருப்பார்கள்; ஆரண்யங்களைக் கடந்திருப்பார்கள்; அவர்கள் தோள் வீங்கியிருக்கும்; கண்கள் சிவந்திருக்கும்; வேல் எறிந்திருப்பர்; அது எதிரியின் விலாவில் பாய்ந்திருக்கும்; வெற்றி கிடைத்திருக்கும். பரணி பாடியிருப்பர்! இப்படித்தான் தமிழகத்தில் போர் நடந்ததாகப் பழம்பெரும் காப்பியங்களில் காணமுடியுமே தவிர வேறு விதமாகக் காணமுடியாது.

தமிழ் மன்னன் போர் என்று அறிவித்ததும் போர்ப் பிரதானியர்

புடைசூழ முன் குரு வந்தார்; கொலுமண்டபத்திலுள்ள மந்திரிகள், மக்கள் அனைவரும் எழுந்து நின்றனர். மன்னன் சிம்மாசனத்திலிருந்து இறங்கி ஓடிவந்து குருவை வரவேற்று ஓர் ஆசனத்தில் அமரவைத்தான். குரு அனைவரையும் ஆசிர்வதித்தார். பிறகு குரு பேசுகிறார்.

குரு:- ராஜன்! போருக்குக் கிளம்புவதாகக் கேள்விப்பட்டேன்!

அரசன்:- ஆம்! குருதேவா! அதற்குத் தங்கள் அனுக்கிரகம் வேண்டும்.

குரு:- ராஜன்! அப்படியானால் எந்தப் பக்கம் படையெடுக்க உத்தேசம்?

"உத்தேசமென்ன, ஸ்வாமி, தங்கள் உபதேசம் மிதிலாபுரி மீது" என்று மன்னன் கூறினான்.

உடனே குரு, "யோசித்துச் செய். வடகிழக்கில் வால் நட்சத்திரம் தோன்றியிருக்கிறது. மன்னனுக்கு ஆகாது என்பார்கள், மேலும் இம்மாதம் நவக்கிரகங்கள் சரியில்லை; திசை மாறியிருக்கின்றன. ஆகையால் போர் தொடங்குமுன், ஓர் யாகம் நடத்தவேண்டும். அந்த வேள்வி வெற்றிகரமாக முடிந்தால்தான் உனக்குப் போரில் வெற்றி கிட்டும்" என்று கூறினார். மன்னன் அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். யாகம் நடந்தது. நெய்யை அக்கினியிலிட்டு வேதம் ஓதினர். ஒமப்புகை கிளம்பியது. ஆடு, கோழி அறுக்கப்பட்டன. பிறகுதான் நம் மூதாதையர்களுக்குப் போரில் வெற்றி கிட்டியது என்பதாக எங்காவது பாடல்களைக் காட்ட முடியுமா? அத்தகைய, காட்ட முடியாத நிலை தமிழகத்தில் எத்தகைய நினைப்பைத் தந்திருக்கும். இயற்கையாகவே நல்ல உயர்ந்த நினைப்புகளைத் தந்தது. இடைக்காலத்தில் வந்து புகுந்த யாகம், யோகம், மாகாளி, திரிசூலம், ஜெபமாலை, கமண்டலம் ஆகியவைகள் தாழ்ந்த நினைப்பைத் தந்தன. தமிழர் நிலை தாழ்ந்தது; அயல் நாட்டார் நமது நினைப்பைக் கேட்டு, கேலி செய்கிற அளவுக்குத் தாழ்ந்தது.

நண்பர், தலைவர் மதியழகன் நான் வருங்காலத்தில் தமிழ்நாட்டின் தூதுவனாக மேல் நாட்டுக்குச் செல்ல வேண்டுமென்று கூறினாரே, நான் வேண்டாம்; வேறு யாராவது ஒருவர் மேல் நாடு செல்லுகிறார் என்று வைத்துக் கொள்வோம், சென்றவரைப் பார்த்து மேல்நாட்டொருவர், "ஆம்! தோழரே!! உமது நாட்டில் பேசப்பட்டுவரும் வாயுவாஸ்திரம் எவ்வளவு வல்லமை வாய்ந்தது, அதை எப்படிச் செய்வது, பிரயோகிப்பது?" என்று கேட்டால் நமது தமிழகத்தின் தூதர் என்ன பதில் சொல்லுவார். ஆனால் அவரே அகநானூறு, புறநானூறு காலத்

தமிழ்நாட்டின் தூதுவராக ஜினிவாவோ அல்லது அமெரிக்காவோ சென்றிருந்தால் எப்படி அவரது நிலை இருந்திருக்கும்? அது எத்தகைய நினைப்பைத் தந்திருக்கும்? வாயுவாஸ்திரத்தைப் பற்றிய சர்ச்சை இருக்காது. எனவே "எப்படிப் பதில் கூறுவது?" என்று இன்றைய தமிழ்நாட்டின் தூதுவருக்குத் தோன்றிய பிரச்சனையும் தோன்றியிருக்காது. பெருமிதத்துடன் தமிழ்நாட்டின் வேல் வில்லின் சிறப்பைப் பற்றியும், வீரத்தைப் பற்றியும், போர் முறையைப்பற்றியும் பேசும் நிலை ஏற்பட்டிருக்குமே! ஏன் இப்பொழுது அந்நிலை இல்லை; அந்த நிலை எப்படி மாறியது? சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழனுடைய கலாசாரம், பழக்கவழக்கம், பண்பு, நாகரிகம் யாவும் சங்க காலத்திற்கும் இக்காலத்திற்கும் மாறுபட்டிருக்கக் காரணம் என்ன? ஆரியர் - திராவிடர் பிரச்சனையை மறந்தே யோசித்துப் பாருங்கள். என்ன பதில்? இன்று ஆரியரும், திராவிடரும் இரண்டறக் கலந்து விட்டதாகக் கூறப்படுகிறது. அப்படிக் கலந்துவிட்டதாகவே ஒப்புக் கொள்ளுகிறேன், வாதத்திற்காக. இதற்கு (கலப்பதற்கு) முன்பு? பல்கலைக்கழகத்திலே நீங்கள் படிக்கிறபாடம் ஆரியர் என்றோர் இனம் அல்லது கூட்டம் பன்னெடும் ஆண்டுகளுக்கு முன்பு ஆசியாவிலிருந்து இந்தியா நோக்கி வந்தது. யாரும் மறுப்பதில்லை. வரும்பொழுது அவர்கள் ஆடு, மாடு ஓட்டிக் கொண்டு வந்தார்கள்; மறுக்கவில்லை. ஓட்டிக்கொண்டு வந்தவர்கள் சில நாட்களில் சிந்துநதி தீரத்தில் ஆரியாவர்த்தத்தைப் படைத்தார்கள்; மறுக்கவில்லை. அப்பொழுது தெற்கே தமிழ்நாடு இருந்தது; மறுக்கவில்லை. தமிழ்நாட்டில் இருந்தவர்கள் தமிழர்கள்; மறுக்கவில்லை. தமிழர்களுக்கென்று ஒரு தனிப்பண்பு இருந்தது; இதையும் மறுக்கவில்லை. தமிழ் நாட்டில் குடியேறிய ஆரியர்கள் சற்றேறக்குறைய 3,000 ஆண்டுகளுக்கு முன் வந்தனர்; இதையும் மறுக்கவில்லை. ஆகவே, ஆரியர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தவர்கள்; வந்த பொழுது தமிழர்கள் உன்னத நிலையில் இருந்தனர் – என்பதை எவரும் மறுப்பதில்லை. யாவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

தமிழ்நாட்டில் குடியேறிய ஆரியர்கள் தமிழர்களைப் பார்த்து என்ன எண்ணியிருப்பார்கள். பச்சைப் புற்றரைக்கே பஞ்சமான நாட்டிலிருந்து வந்தவர்களின் மனதிலே, தமிழகத்திலுள்ள மாந்தோப்புகளும் மண்டபங்களும், சாலைகளும் சோலைகளும், குன்றுகளும் கோபுரங்களும், வாவிகளும் வயல்களும் எத்தகைய எண்ணங்களைத் தந்திருக்கும்? நிச்சயம் தமிழர்களைப் பார்த்து அவர்கள் கேட்டிருப்பார்கள்: ‘மெல்லிய ஆடை அணிந்திருக்கிறீர்களே, அது ஏது?’ என்று. தமிழர்கள் ‘அது எங்கள் கைத்திறமை; இந்திரன் தந்த

வரப்பிரசாதமல்ல' என்று கூறியிருப்பார்கள். 'இமயம் வரை சென்று உங்களது இலச்சினையைப் பொறித்திருக்கிறீர்களே, அது எப்படி' என்று கேட்டிருப்பார்கள். அதற்குத் தமிழர்கள் 'அது கருடாழ்வார் கடாட்சத்தாலல்ல, எங்கள் தோள் வலிமையினால்' என்று கூறியிருப்பார்கள். இன்னும் 'உங்களது இசை இன்பமாயிருக்கிறதே, அது எப்படி' என்று ஆரியர்கள் தமிழர்களைப் பார்த்துக் கேட்டிருப்பார்கள். அதற்குத் தமிழர்கள் 'நாரதர் தந்தியில் மீட்டிடும் தேவகானமல்ல; நாங்கள் கண்டுபிடித்த யாழின் தன்மையது' என்று கூறியிருப்பார்கள். மீண்டும் 'அந்த யாழ் ஏது' என்று கேட்டிருப்பார்கள், 'அது திருப்பாற்கடலில் கடைந்தெடுத்ததல்ல; எங்கள் இசையறிவில் கடைந்தெடுத்தது'என்று கூறியிருப்பார்கள். ஆரியர்கள் முத்தைப் பார்த்து 'அது என்ன?' என்று இருப்பார்கள். 'அது தேவலோகத்துச் சரக்கல்ல; எமது தீரர்கள் கடலில் மூழ்கிக் கண்டெடுத்த முத்து' என்றிருப்பார்கள், தமிழர்கள். அந்தக் கால நிலை அவர்களுக்கு அத்தகைய நினைப்பைத்தான் தரும். இது வரலாறு கூறுகிற விஷயம். வரலாற்று ஆசிரியர்களும் அறிவார்கள். ஒரு காலத்தில் ஆரியர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள். வந்தவர்கள் வறண்ட நாட்டிலிருந்து வளமான நாடு தேடி வந்தார்கள்; வளமுள்ள நாட்டில் புதியதாக உலவிய பொழுது அச்சத்துடனேயே உலவினார்கள் என்பதை. இது வரலாற்று ஆசிரியர்கள் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிற பாடம். உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்களோ என்னவோ? இது எனக்கு என் வரலாற்று ஆசிரியர் கலாசாலையில் கற்றுக் கொடுத்த பாடம். கற்றுக் கொடுத்த பாடத்தை மறுப்பது ஆசிரியருக்கு அறமாகாது. கற்றுக்கொண்ட பாடத்தை மறப்பது எனக்கு அழகல்ல. குரு சொல் தட்டிய குற்றத்திற்கும் உள்ளாகிறேன். ஆகவே நான் கற்றதைக்கூறுகிறேன்.

வளமான நாடு. அதில், வளைந்து செல்லும் வாய்க்கால்கள். வாய்க்கால்களுக்குப் பக்கத்தில் வயல்கள். வயல்களுக்குப் பக்கத்தில் சாலைகள். சாலைகளுக்குப் பக்கத்தில் குன்றுகள். குன்றுகளைத் தொட்டுத் தடவும் மேகங்கள். மேகங்கள் தரும் மழைத்துளிகள், மழைத்துளிகண்டு மகிழ்ச்சியுறும் மக்கள் - இவைகளைப் பார்க்கும் வெளியிலிருந்து வந்த ஆரியர்கள், என்ன எண்ணியிருப்பார்கள், என்ன எண்ணுவார்கள், என்ன எண்ணியிருக்க முடியும்? சென்னை, பட்டப்பகல் 12 மணி நேரம், தார் ரோடு இளகியிருக்கிறது. ஒருவன் நடந்து செல்கிறான், மற்றொருவன் பக்கத்தில் போட்டா மடி வேட்டி கட்டிக் கொண்டு மெருகு கலையாத காரில் செல்லுகிறான்; காரைப்பார்த்து நடந்து செல்லுகிறவன் என்ன நினைப்பான்? நாம்தான்

தினம் விதண்டாவாதக்காரர்கள். வேதவேதாந்திகள், உத்த மோத்தமர்கள் என்ன எண்ணுவார்கள்? "நாம் நடந்து செல்லுகிறோம்; அவன் பறந்து செல்லுகிறான். நான் ஒதுங்கி நிற்கிறேன்; அவன் என்னை உராய்ந்துகொண்டு காரில் செல்லுகிறான் - நான்? பிறந்த வேளை நடந்து செல்லுகிறேன்" என்று எண்ணுவார்கள்! எப்படி எண்ணுவார்கள்? ஏன் எண்ணவேண்டும்? நடந்து செல்லுகிறவன் எண்ண மாட்டானா, ஏ ஆண்டவனே! இருவரும் உனது புதல்வர்கள்தான்; இருந்தும் வெயிலின் வேகத்தைத் தோற்கடிக்க அவனுக்குக் கார்; சிரமப்படாமல் செல்வதற்குச் செல்வம்; நான் நடந்து செல்லுகிறேன்; எனக்குக் காலுக்குச் செருப்புக்கூட வாங்கமுடியாதபடி தரித்திரம். இது ஏன்?" இதுமாத்திரம் எண்ணியிருக்கமாட்டான்; மேலும் தொடர்ந்து எண்ணியிருப்பான்.

ரோட்டில் நடந்து செல்லுகிறவன் காரில் செல்லுகிறவனை முதலில் பார்த்ததும் ஏக்கப்பட்டிருப்பான். அருகில் வந்ததும் அசூசைப்பட்டிருப்பான். இவன் ஒதுங்கி ஓடும்படி அவன் மோதுவது போல், காரில் வந்தபோது கோபப்பட்டிருப்பான். கோபம், அவனைப்போல், நாமும் ஒரு காரில் செல்லவேண்டும். முடியுமானால் அவனுடையதைவிட ஒரு உயர்ந்த ஊர்தியில் அவனை உராய்ந்துகொண்டு செல்லுவது போல் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைக் கிளறும். அது காரில் செல்லுகிறவனை அழிக்கும் வேலையை உருவாக்கும். இது சகஜம்! அவன் நிலை அவனுக்கு அத்தகைய நினைப்பைத் தருகிறது. வளமுள்ள தமிழ் நாட்டைப் பார்த்து வறண்ட நாட்டிலிருந்து வந்த ஆரியர்கள் தமிழ் நாட்டின் செல்வத்தைப் பார்த்து எண்ணுவதிலிருந்து தப்பியிருக்க முடியாது.

பட்டப்பகல் பனிரண்டு மணி நேரத்தில் சென்னை தார் ரோட்டில் காரில் செல்லுகிறவனைப் பார்த்து நடந்து செல்லுகிற ஏழை எண்ணியதைப் போலத்தான் அவர்கள் தமிழர்களைப் பார்த்து எண்ணியிருக்க முடியும். அந்தக்காலம் இருக்கட்டும். அண்மையில் பர்மாவை ஜப்பானியர் பிடித்துக்கொண்ட பொழுது செல்வமுள்ள பர்மாவைப் பார்த்த ஜப்பானியர்கள், என்ன எண்ணினார்கள், என்ன எண்ணியிருப்பார்கள், என்ன எண்ணியிருக்க முடியும்? பர்மா அரிசியைப் பார்த்ததும் இது நல்ல அரிசியாய் இருக்கிறதே உங்களுடைய நெற்களஞ்சியங்களைக் காட்டுங்கள் என்றிருப்பார்கள். வெள்ளியைப் பார்த்ததும் உங்களுடைய இரும்புப் பெட்டியைக் காட்டுங்கள் என்றிருப்பார்கள். பயந்த பர்மியர்கள் தங்கள் நெற்களஞ்சியங்களையும் இரும்புப் பெட்டிகளையும் ஜப்பானியர்களுக்குக் காட்டியிருப்பார்கள். காட்டத் தவறியவர்களை

ஜப்பானியர்கள் சுட்டுத் தள்ளியிருப்பார்கள். இதுதான் நடந்திருக்கும். இதே போல்தான் சற்றேறக்குறைய 3000 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டைப் பார்த்ததும் ஆரியர்கள் எண்ணியிருப்பார்கள். வளமுள்ள நாடும் அதில் வளைந்து வளைந்து செல்லும் ஆறும், அதற்குப்பக்கத்தில் வயல்களும் இருக்கக் கண்ட ஆரியர்கள் அத்தகைய செல்வமுள்ள நாடு தங்களுக்கில்லையே என்று ஏங்கியிருப்பார்கள். ஆனால், தமிழர்களைப் பார்த்து நெற்களஞ்சியங்களையும் பணப் பெட்டிகளையும் காட்டச் சொல்லிக் கேட்டிருக்க மாட்டார்கள். கேட்கவில்லை, கேட்கத் தைரியமில்லை, தைரியமிருக்க, கையில் மருந்தில்லை; பர்மியர்களைப் போல, தமிழ்நாட்டில் செல்வங்களைக் கண்டிருப்பார்கள். மிதமிஞ்சிய போகபோக்கியத்தில் புரளும் தமிழர்களையும் கண்டிருப்பார்கள். அசூயைப்பட்டிருப்பார்கள், அபகரிக்கவும் நினைத்திருப்பார்கள் ஏழைகாரில் செல்லுகிறவனைக் கண்டு நினைத்ததைப் போல். ஆனால் அபகரிக்க வேண்டுமென்று நினைத்திருப்பார்களே ஒழியத் தமிழர்களிடையே அச்சத்தைப் புகுத்தியிருக்க மாட்டார்கள். அதாவது நெற்களஞ்கியங்களை, பணப்பெட்டிகளை, பத்திரப் பீரோக்களைக் காட்டத் தவறிய பர்மியர்களை ஜப்பானியர்கள் சுட்டு வீழ்த்தியதைப் போலத் தமிழர்களை ஆரியர்கள் சுட்டு வீழ்த்தவில்லை. சுட்டு வீழ்த்தவில்லையே தவிர, தமிழர்களது நெற்களஞ்சியங்களையும், பணப்பெட்டிகளையும் கண்ட ஆரியர்கள் அவைகளை அபகரிக்கச் சூதான திட்டமிட்டார்கள்.

ஜப்பானியர்களுக்கும் ஆரியர்களுக்கும் எண்ணியதை நிறைவேற்றக் கடைப்பிடித்த மார்க்கங்களில் வேறுபாடு இருக்கலாமே ஒழிய, எண்ணிய எண்ணங்களில் இம்மியளவும் மாறுபாடு இல்லை. அந்த விபரீத எண்ணங்களின் விளைவுதான் தமிழகத்தின் கானகங்களில் கங்கைக் கரையில் உலவியவர்களின் கூட்டம், யாகம், ஓமப்புகை, வேத ஒலி கேட்கும்நிலை முதலியன தோன்றின; தமிழில் ஆரியம் கலந்தது. தமிழகத்துடன் ஆரியவர்த்தம் ஐக்கியமானது; பிறகு கேட்க வேண்டுமா? பாசறைகளுக்குப் பக்கத்தில் ஆஸ்ரமங்கள். மன்னர்களுக்குப் பக்கத்தில் மாடல மறையவர்கள் என்ற நிலை ஏற்பட்டது. தனிநிலை கெட்டது, நிலை கெடவே நினைப்பும் கெட்டது; அயல்நாட்டார் கண்டு கேலி செய்கிற அளவுக்குக் கெட்டது.

இப்பொழுது நீங்கள் கேட்கலாம், 'ஆரியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது தமிழர்களுக்குத் தனிப்பண்பு இருந்ததாகக் கூறினீர்களே, அந்தத் தனிப்பண்பு ஜீவித்திருக்க முடியாமல் போனதற்குக் காரணம் என்ன? அயல் நாட்டார் தங்களுடைய நினைப்பைக் கண்டு கேலி

செய்கிற அளவுக்குத் தமிழர்கள் தங்களுடைய தனிப்பண்பு கெட ஏன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்?’ என்று நான் உங்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன்; "நிலைக்குத் தக்கவாறு பண்பும் மாறும், செல்வம் உயர்ந்திருந்தால் மனப்பண்பு உயர்ந்திருக்கும். எளியவரைக் கண்டால் இரக்கம் காட்டச்சொல்லும், மனதிலே தாராளம் இருக்கும். பேச்சிலே பெருமிதம் தோன்றும். எடுத்துக்காட்டாக, மாலை நேரம் ஒரு வாலிபன் தன் நண்பர்கள் புடைசூழ, நன்றாகச் சாப்பிட்டுவிட்டுக் காபி கிளப்பிலிருந்து வெளியில் வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். வருகிற வாலிபனைப் பார்த்து ஒரு பிச்சைக்காரன், ‘சாமி, காலணாகாசு, சாமி’ என்று கேட்பான். உடனே வாலிபன் ஒரு அணாவை வீசி எறிவான். பீடாவைப் போட்டுக் கொண்டே இன்னும் கொஞ்ச தூரம் சென்றவுடன் வாலிபனைப் பார்த்து இன்னொரு பிச்சைக்காரன் "ஐயா" என்று கையை நீட்டுவான். இல்லை என்னாமல் காலணா காசு கொடுப்பான். இன்னும் கொஞ்ச தூரம் சென்றவுடன் அதே வாலிபனைப் பார்த்து மற்றொரு பிச்சைக்காரன் "ஐயா" என்றால் "சீ போ! போடான்னா போ!" என்று கூறிவிட்டுத் தன் நண்பர்களைப் பார்த்து, "Now a days don't agree with the Beggar problem Sir." என்று சொல்லுவான். கொஞ்ச நேரத்தில் ஒரு வாலிபனுடைய உள்ளம் மாறக் காண்கிறோம். முதலில் காலணா கேட்ட பிச்சைக்காரனுக்கு ஒரு அணாவை வீசி எறிந்த அதே வாலிபன்தான் மூன்றாந்தடவையாகப் பிச்சைக்காரனைச் சந்தித்தபோது "சீ! போடா!" என்று ஏசுகிறான். காரணம் காபி கிளப்பை விட்டு வெளிவந்தபோது இருந்த ஆனந்தம் மாறி, கையில் காசு குறைய ஆரம்பித்தவுடன் வழக்கமாக அவனுடைய மனம் மாத்திரம் என்ன; எவனுடைய மனமும், அந்த நிலையில் அப்படி மாறித்தானே ஆகும்!

சாதாரண ஒரு பணக்கார வாலிபனுடைய நிலையே இப்படி என்றால், போக போக்கியத்தில் புரண்ட தமிழர்களுடைய நிலை எப்படி இருந்திருக்கும்? செல்வத்தில் புரண்ட தமிழர்களின் நினைப்பு முதலில்ஆரியர்களைக் கண்டதும், காபி கிளப்பை விட்டு முதலில் உல்லாசமாக வெளிவந்த வாலிபனுடைய நினைப்பைப் போலவே இருந்தது. தமிழகத்திலே செல்வத்திற்கு என்ன குறைவு. கடலிலே முத்து, சுரங்கத்திலே தங்கம், காட்டிலே அகில், நஞ்சை, புஞ்சை வெளிகளிலே நெற்களஞ்சியங்கள், பாசறைகளிலே போர்க் கருவிகள், கையிலே செல்வம், மனதிலே தாராளம் - இவ்வளவையும் பெற்றிருந்த தமிழர்கள் எளிய நிலையிலிருந்த ஆரியர்களைக் கண்டு இரக்கப் பட்டார்கள். தாராளமாக, தனத்தை அள்ளி அள்ளி அவர்களுக்குக் கொடுத்தார்கள்,

தாங்கள் தரித்திரராகி விடுவோம் என்பதை மறந்தார்கள். அவர்கள் தத்துவங்கள், நினைப்புகள். நம்பிக்கைகள் ஆகியவைகளுடன் தமிழர்கள் நினைப்பு கலந்தால் என்னவாகும்? தங்கள் தனிப்பண்பு என்பதைப் பற்றி அலட்சியமாயிருந்தார்கள். கவலைப்படவில்லை, தானம் தொடர்ந்து நடந்து வந்தது. ஆரண்யங்களிலும், சாலை ஓரங்களிலும், கோபுர வாசலிலும் வாழ்ந்து வந்த ஆரியர்கள் மாடவீதியில் குடியேற ஆரம்பித்தார்கள். எங்கும் ஓமப்புகை, வேத ஒலி பரவியது. தமிழர்களின் தனமும் குறைந்தது, தனிப்பண்பும் கெட்டது. கொஞ்சமாகக் குறையவும், கெடவும் ஏற்பட்டபொழுது முதல் இரண்டு தடவை பிச்சைக்காரனுக்குக் காசு கொடுப்பதால் பையிலுள்ள பணம் குறைவதைப் பற்றிக் காபி கிளப்பை விட்டு வெளிவந்த வாலிபன் அலட்சியமாக இருந்ததைப் போலவே தமிழர்களும் ஆரியர்களிடம் தங்கள் தனம் போய்ச் சேருவதைப் பற்றி அலட்சியமாயிருந்தார்கள். அதிகமாகச் செல்வம் குறைந்து, தமிழர்கள் கோட்பாடுகளுக்குள்ள செல்வாக்கும் குறைய ஆரம்பித்தவுடன், தமிழர்களுடைய நினைப்பும் மாறிவிட்டது. வளம் வறண்டவுடன் மனதிலே உள்ள தாராளம் சுருங்கி விட்டது. தாராளம் சுருங்க ஆரம்பித்ததும் நினைப்பு, தனம் சென்ற பக்கம் நோக்கிச் செல்லுகிறது, தமிழர்கள் "எப்படி தரித்திரரானோம்?" என்று தங்கள் மனத்தைத் தாங்களே கேட்டுக்கொள்கிறார்கள். அந்த விசாரணையின் தீர்ப்புத்தான், பிரஞ்சுக்காரர்கள் படையெடுப்புக்கு முன், பிரிட்டிஷார் படையெடுப்புக்கு முன், டச்சுக்காரர்கள் படையெடுப்புக்கு முன், போர்த்துகீசியவர்கள் படையெடுப்புக்கு முன், ஆப்கானியர் படையெடுப்புக்கு முன், அரபியர் படையெடுப்புக்கு முன், மகாவீரன் அலெக்சாண்டர் படையெடுப்புக்கு முன் இந்தியாவின் வடமேற்குக் கணவாய் வழியாக வந்த ஆரியர்கள் தமிழ்நாட்டில் குடியேறிய காலந்தொட்டுத் தமிழகம் ஷீணதிசை அடைந்தது. அடைந்திருக்க வேண்டும். அவர்கள் கலப்பால்தான் தமிழ்நாட்டின் நிலை தாழ்ந்தது, நினைப்பும் தாழ்ந்தது என்று வரலாற்றில் இல்லை. ஆனால் ஆரியர்கள் சிந்துநதி தீரத்திலிருந்து தக்காணம் நோக்கி வந்தபோது தமிழகத்தில் செல்வம் கொழித்திருந்தது; தமிழர்கள் நெஞ்சில் நல்லெண்ணங்கள் குடிகொண்டிருந்தன என்பதும், ஆரியர் குடியேற்றத்திற்குப் பிறகு செல்வம் குறைந்திருக்கிறது; நல்லெண்ணங்கள் மறைந்து நச்சுக் கொள்கைகள் குடிகொண்டிருக்கின்றன என்பதும் வரலாற்று உண்மைகள். இதை யாரும் ஒப்புப்கொள்கிறார்கள்; மறுப்பதில்லை. எனவே ஆரியர்களது வேத இதிகாசக் கருத்துக்கள், அகநானூறு புறநானூறு கருத்துக்களை மறைத்துப் பிரகாசிக்கத் தொடங்கியவுடன் தமிழர்களின் நினைப்பு

கெட்டு, நினைப்பு கெடவே, நிலையும் கெட்டிருக்க வேண்டும் என்பது என் யூகம். வரலாறு ஆரியர்கள் அது பற்றி ஆராய்ச்சி செய்யட்டும்.

ஏதோ தரித்திரராகிவிட்டோம்; நமது நிலையும் நினைப்பும் தாழ்ந்திருக்கின்றன. இனியாவது தரித்திரராகாமல் இருக்க, ஒரு வழி வகுக்க வேண்டும் என்பதே என் அவா. பழங்காலத் தமிழகத்தைப் பற்றி, அதன் சிறப்பைப் பற்றி, அதில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி, காதலைப் பற்றி, பண்பைப் பற்றி இன்று நாட்டின் பெரும் பகுதியினரான பாமர மக்களுக்குத் தெரியாது. பல்கலைக் கழகத்தில் படிக்கும் ஒரு சிலருக்குத்தான் தெரியும். தெரிந்த நம் நெஞ்சில் மீண்டும் தாழ்ந்த மிழகத்தை உயர்த்த வேண்டும் என்றும், இன்று மக்கள் மனதில் படிந்திருக்கும் மூடநம்பிக்கைகளை, தமிழ்ப்பண்பாட்டிற்கு மாறான கருத்துக்களைக் குடியேற்ற வேண்டும் என்றும் நினைப்புகள் தோன்றியிருக்கின்றன. இந்த நினைப்புகள் பாமரமக்கள் மனதிலும்தோன்ற நாட்டில் எங்கும் அறிவுப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். பண்டைய நம் பண்புகள் பற்றி ஏட்டிலே உள்ளவைகளை நாட்டிலே உள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இப்பொழுது உங்களுக்கு மாத்திரமல்ல பரிட்சை நடக்கப்போகிறது, தமிழகத்திற்கும் தற்காலம் பரிட்சை நேரம். நீங்கள் படிக்கிறீர்கள், உங்களுக்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள். நீங்கள் பரிட்சையில் தேறிடலாம். ஆனால் தமிழ்நாடு பரிட்சையில் தேறவேண்டுமே! பரிட்சைக்குப் போகும் தமிழ்நாட்டிற்கு யார் பாடம் சொல்லிக்கொடுப்பது? தமிழ் நாட்டிற்குப் போதனை செய்வதற்கு மாணவர்களைத் தவிரவேறு யார் இருக்கிறார்கள்? உங்களைக் கேட்கிறேன்; ஆசிரியர்களைக் கேட்கிறேன்; என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்; நீதியைக் கேட்கிறேன்; அறிவைக் கேட்கிறேன்; வெட்டவெளியில் நின்று ஆகாயத்தைப் பார்த்துக் கேட்கிறேன்; எதிரொலியாவது பதிலைத் தரட்டும். மாணவர்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் தகுதியானவர்கள். "யவன நாட்டுக் கலங்கள் தமிழ் நாட்டுக் கடற்கரையை முத்தமிட்டன. தமிழ்நாட்டு முத்துக்களை இத்தாலி நாட்டு எழிலரசிகள் தங்கங்களைக் கொடுத்து வாங்கினார்கள்; தமிழ்நாட்டு மன்னன் ஒருவன் ஈழநாடு சென்று வெற்றி பெற்றான். இமயத்தில் சேர, சோழ, பாண்டியர்களது இலச்சினைகள் பொறிக்கப்பட்டன; வெற்றி முரசு கொட்டினார்கள்; போரும் காதலும் அவர்கள் போற்றிய பொருள்கள்" என்றெல்லாம் பண்டைத் தமிழ்நாட்டின் நிலையைப் பற்றி எடுத்துக் கூறினால்தான், பாமர மக்களும் நாம் ஆசைப் படுவதுபோல் மீண்டும் தமிழ்நாட்டில் செல்வம்

தழைக்க வேண்டும், நல்லெண்ணங்கள் நிலைக்க வேண்டும் என்ற நினைப்பைப் பெறமுடியும்.

ஆனால் அரசாங்கம் இப்படித் தமிழனின் பண்டைப் பெருமையை எடுத்துக்கூறி இன்று மனதில் படர்ந்துள்ள மூடநம்பிக்கைகளை அகற்றுமாறு பகுத்தறிவு பிரசாரம் செய்வதை ஆபத்து என்று கருதுகிறது. பல்கலைக் கழகத்தில் பாடப்புத்தகங்களில் பகுத்தறிவு புகுத்தப்படுவதைத் தடை செய்கிறார் கல்வி மந்திரியார். மறைந்த வரலாற்றை மக்களுக்குக் கூறுவது சர்க்கார்க்கு வகுப்புத் துவேஷமாம். நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன்; மாணவர்களை எங்களுடைய பிரச்சாரங்களை கேட்க வேண்டாம் என்று தடுத்தாலும், பல்கலைக்கழகத்தை மூடினாலும், பகுத்தறிவுக்குத் தடை விதித்தாலும்,பிரச்சாரத்தைச் சட்ட விரோதமாக்கினாலும், அறிவுப் பஞ்சமே உண்டாக அரசாங்கம் ஏற்பாடு செய்தாலும், மண்டபங்களிலே, மாந்தோப்புகளிலே, மலைச்சரிவுகளிலே, மரநிழலிலே, பாதை ஓரத்திலே, நாங்கள் பிரச்சாரம் செய்வோம். எங்களுடைய குரல் எங்கும் எட்டித்தான் ஆகும். எங்களுடைய கருத்து யாருடைய மனதிலே படவேண்டாம் என்று கருதினார்களோ, அவர்களுடைய மனதிலே புகுந்தே தீரும். மூன்று அடுக்கு மேல்மாடியின் படிக்கட்டுகளைக் கட்டும் தொழிலாளி மனதிலே, தான் ஏழையாக இருப்பதற்கும், மாடி வீட்டுக்குச் சொந்தக்காரன் பணக்காரனாக இருப்பதற்கும் "விதிதான்" காரணம் என்ற மூடநம்பிக்கை போகும் வரையில் அவன் பல மாடி வீடுகளைப் பிறருக்கும் கட்டிக் கொடுத்துவிட்டு 'தான் ஏன் அந்த மாடி வீடுகளில் ஒரு வீட்டின் உப்பரிகையில் உல்லாசமாக உலவக்கூடாது' என்று நினைத்துப் பார்க்காமல் நினைத்துப் பார்க்கவும் நேரமில்லாமல், பகலெல்லாம் உழைத்துவிட்டு இரவானதும், தன் குடிசைக்குள் குனிந்து செல்லுவான். மனதிலே இருந்த மூடநம்பிக்கை பகுத்தறிவுப் பகலவனைக் கண்டு மூடுபனிபோல நீங்க ஆரம்பித்த மறுகணமே, தொழிலாளி நினைக்க ஆரம்பித்துவிடுவான்; "நான் ஏன் மாடிவீட்டில் வாழக்கூடாது? பிறப்பில் ஒருவன் ஏழையாகவும் மற்றொருவன் பணக்காரனாகவும் ஏன் பிறக்க வேண்டும்?" என்று தன் மனதைக் கேள்வி கேட்பான். அந்த நினைப்பின் வளர்ச்சியைத் தடைப்படுத்த யாராலும் முடியாது.

ஆகையால் மக்கள் மனதிலே படிந்துள்ள மூடநம்பிக்கைகளை முதலில் அகற்றியாகவேண்டும். இந்நாட்டிலோ 100க்கு 96 பேர் படிக்காதவர்கள், படிக்காதவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. பாழும் இதிகாசப் புராணக் கருத்துக்களைப் பலமாகக் கடைப்பிடித்துக்

கொண்டிருப்பவர்கள். இது நல்ல நிலையா? இருக்கலாமா? இதை ஒழிக்க நாம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டோம்? அரசாங்கம் அறியாமையையும் மூடநம்பிக்கைகளையும் போக்க என்ன செய்தது? ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? திட்டம் வைத்திருப்பதாக அறிகுறியே இல்லை.

எடுத்துக்காட்டாக நான் இன்று பத்திரிக்கையில் படித்த செய்தி ஒன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். இன்று நமது நிலையும் நினைப்பும் எப்படி இருக்கிறது என்று பாருங்கள். இந்தச் செய்தியைக் கேட்கும் உங்களுக்கு அறியாமையையும் மூடநம்பிக்கைகளையும் போக்கத் திட்டம் இருக்கவேண்டிய இந்திய சர்க்காரிடம் எத்தகைய திட்டம் இருக்கிறது என்பது தெரியும். மகாபாரதத்திலுள்ள சாந்தி பருவத்தை, நேப்பாள மகாராஜாவிடம் சென்று அங்குள்ள சில ஆதார ஏடுகளைப் பார்த்து ஆராய்ச்சி செய்து புதிய சாந்தி பருவத்தை இந்திய சர்க்கார் வெளியிடப் போகிறார்களாம், எப்படி இருக்கிறது ஆராய்ச்சி!

வெளிநாடுகளில் அமெரிக்காவில் மேகத்தை மழை பெய்விக்க வைப்பதற்கு மேகங்கள் ஆகாயத்தில் உலவிக் கொண்டிருக்கும் பொழுது விமானத்தின் மூலம் அவைகளின் மீது பனிக்கட்டிகளை வீசினால் மேகம் குளிர்ச்சி தாங்காமல் மழைத் துளிகைளைத் தரும். பத்தினி பெய் என்றால் பெய்கிற இந்த நாட்டிலா மழை இல்லை. மழையை எப்படி பெய்யச் செய்வது என்று ஆராய்ச்சி செய்வது பற்றியோ அரசாங்கத்தாருக்குக் கவலையில்லை. அமெரிக்காவில் மழை வேண்டிய பொழுது பயிருக்குத் தர வானை நோக்கிக் கொண்டிருக்க முடியாது. தேவைப்பட்ட பொழுது மழையைப் பெற ஒரு மார்க்கம் வேண்டும் என்று ஆராய்ச்சி செய்து, விமானத்தைக் கொண்டு மேகக் கூட்டங்களின்மேல் பனிக்கட்டிகளை வீசி மழை பெய்விக்கக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் மேகத்தையே உண்டாக்க ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்களாம். இந்தியாவில் மழை இல்லாததால் பயிர்கள் வாட, பயிர்கள் வாடுவதால் மக்கள் வாடுகிற நேரத்தில் இந்திய சர்க்கார் மகாபாரதத்தில் சாந்தி பருவத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள். அமெரிக்காவில் பருவமழை தவறினால் பருவ மழையைத் தேவைப்பட்டபோது உண்டாக்க ஆராய்ச்சி செய்கிறார்கள்; இரண்டு நாடுகளைப்பற்றியும் உங்களுக்கு என்ன நினைப்பு தோன்றும். மக்கள் மழையில்லாமல் பட்டினியால் சாகும்பொழுது மழையைப்பற்றி ஆராய்ச்சி செய்யாமல் சாந்தி பருவத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் சர்க்காரைப்பற்றி பிறநாட்டார் என்ன நினைப்பார்? நம் நிலையைக்

கண்டு எள்ளி நகையாட மாட்டார்களா? இது போகட்டும். இந்த நாட்டில் கொண்டாடப்படும் விழாக்களைக் கவனியுங்கள்; மேல்நாட்டில் கொண்டாடப்படுகிற விழாக்களையும் கவனியுங்கள்; இந்த நாட்டில் கொண்டாடப்படுகிற எந்த
விழாவாவது ஒரு லட்சியத்தைப் பற்றிப் போதனை புரிவதாக அல்லது நினைவூட்டுவதாக அல்லது உலகத்தின் கவனத்தை இழுப்பதாக இருக்கிறதா என்று பாருங்கள். பிரான்சு நாட்டில் பிரஞ்சுப் புரட்சியைப் பற்றி விழாக் கொண்டாடுவார்கள். இரஷியாவில் மே தினத்தைப்பற்றி விழாக் கொண்டாடுவார்கள். ஒவ்வொன்றும் ஒரு வெற்றி விழாவாகும். அந்தந்த நாடும் அந்தந்த நாட்டு மக்களுமின்றி உலக மக்கள் அனைவரும் கொண்டாடும் திருநாளாகும்; ஏன்? அந்த விழாக்கள் மக்களை அறியாமையிலிருந்தும் அடிமையிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் மீட்டு அறிவு, சுதந்திரம், சுகம் ஆகியவைகளை அடைய நடத்திய வீரப் போராட்டத்தைப் பற்றியும் போராட்டத்தில் கிட்டிய வெற்றியைப் பற்றியும், நினைவூட்டும் மகிழ்ச்சியான நாட்களாகும்.

இங்கு இம்மாதம் விநாயகசதூர்த்தி நடந்தது. உங்களுக்குத் தெரியும் அந்த விழாவால் வீழ்ந்த நாடோ அல்லது சமுதாயமோ, மீண்டும் எழுந்து நடமாட வழியுண்டா? அந்த விழாவால் அறியாமை
நீங்குவதைப்பற்றியோ மக்கள் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியோ வற்புறுத்தப்படுகிறதா? இத்தகைய விழாக்களால் நாடு விமோசனமடைய மார்க்கமுண்டோ? இரண்டு விழாக்களைப்பற்றியும் ஒரே பத்திரிக்கையில் படிக்கிறார்கள். பிரஞ்சுப் புரட்சி பிரான்சு நாட்டில் கொண்டாடப்பட்டதையும் படிக்கிறார்கள். நம் நாட்டில் விநாயக சதுர்த்தி விழா கொண்டாடப்படுவதையும் படிக்கிறார்கள். யாராவது சிந்தித்தார்களா ஏன் நம் நாட்டில் மாத்திரம் விழா இவ்வளவு மோசமான நிலையில் இருக்க வேண்டும் என்று; ஏன் சிந்திக்க வில்லை? பாமரர்களிடம் படிப்பு இல்லை; படித்தவர்களிடம் பண்பு இல்லை. இன்று, சொல்லித்தரப்படுகிற பாடமுறையே மாற்றி அமைக்கப்பட வேண்டும். சிந்தனையைக் கிளறும்படியான எந்தத் திட்டமும் நம் கையில் இல்லை. ஜெர்மனி நாட்டில் ஹிட்லர் தம் ஆட்சியில் கல்வித்துறையில் புகுத்திய புதிய முறைதான் பிள்ளைப் பருவத்திலே ஜெர்மனிய நாட்டு இளைஞர்களுக்கு ஹிட்லரிடம் பற்றும் இராணுவத்தினிடம் மரியாதையும், நாசிசத்திடம் (Naziam) நம்பிக்கையும், கொள்ளச்செய்தது. நாமும்தான் பிள்ளைகளுக்குக் கணக்குப் போடுகிறோம். நமது பிள்ளைகளிடம் "நான் நான்கு

மாம்பழங்கள் வைத்திருந்தேன். அதை இரண்டு பேருக்குக் கொடுத்தால் ஆளுக்கு எத்தனை மாம்பழம்?" என்று கணக்குப் போடுவோம். பிள்ளைகளோ மாம்பழம் ஆளுக்கு எத்தனை என்று யோசிப்பதைவிட மாம்பழத்தின் ருசி எப்படியிருக்கும் என்று யோசிப்பதில் நினைப்பை அதிகமாகச் செலுத்துவார்கள். ஆனால் இப்படியல்ல, ஜெர்மனியில் பிள்ளைகளுக்குக் கணக்குப் போடுவது 4 டாங்கிகள்தான் நம்மிடம் இருக்கின்றன. எதிரியிடம் 8 டாங்கிகள் இருக்கின்றன. எப்படி இந்த 4 டாங்கிகளைக் கொண்டு எதிரியைத் தோற்கடிப்பது என்ற முறையில் கேள்வி இருக்கும். இன்னும் நிமிடத்திற்கு அறுபது மைல் வேகத்தில் செல்லும் விமானம், காலை 7 மணிக்கு இங்கிருந்து கிளம்பி இலண்டனில் குறித்த இடத்தில் குண்டு
வீசிவிட்டு வரவேண்டுமானால் எத்தனை மணி பிடிக்கும் என்று கேள்வியிருக்கும். இத்தகைய கேள்விகள்தான் ஜெர்மனிய நாட்டில் இளைஞர்களுக்கு இராணுவத்திடம் ஆசையையும் நாசிசத்திடம் சுவாசத்தையும் கொடுத்தன. இதைப்போல இராணுவப் படிப்பை, ஹிட்லர் கையாண்ட நாசிச முறையை நாம் கல்வியில் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. கல்வித்துறையில் போதனை மூலம் மக்களுடைய மனதை எப்பக்கத்திலும் திருப்பலாம் என்பதை வலியுறுத்தவே இதை நான் எடுத்துக் காட்டினேன்.

பாடத் திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால்தான் மக்களுக்குப் பழமையிடத்திலுள்ள பாசம் குறையும். மனத்திலுள்ள மாசு நீங்கும். காலத்திற்குத் தக்கதுபோலக் கருத்துவளரும். அப்பொழுது மக்கள் உணவுப் பஞ்சத்தால் மடியும் பொழுது, சாந்தி பருவ ஆராய்ச்சி நடக்காது. மழையைப் பற்றிய ஆராய்ச்சி நடக்கும். சொற்பக் காலத்தில் விளையக் கூடிய பயிர்களைப் பற்றி ஆராய்ச்சி நடக்கும். ஆனால் பகுத்தறிவு, பாடப் புத்தகங்களில் நுழைவதைச் சர்க்கார் தடை செய்தால் நிச்சயம் சாந்தி பருவ ஆராய்ச்சிதான் நடக்கும். மேல் நாட்டார் நம் நினைப்பைக் கண்டு நகைப்பர். பரந்த தேசம்; மூன்று பக்கமும் கடல்கள்; ஒரு பக்கம் உலகம் போற்றும் இமயம்;
நாற்பது கோடிக்கு மேல் மக்களைக் கொண்ட நாடு; மும்மூர்த்திகள் தோன்றிய நாடு; நால்வர் ஆழ்வாராதிகள் அவதரித்த புண்ணிய பூமி; இருந்தும் பஞ்சம்; மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள்; சிலர் இறக்கிறார்கள். சர்க்காரோ சாந்தி பருவ ஆராய்ச்சி செய்கிறார்கள். தொழிற்சாலைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. விஞ்ஞானத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை.

சிலர் கூறலாம், "விஞ்ஞானத்தைப்பற்றி, கவலைப்பட வில்லையா?

விஞ்ஞானத்தை யாரும் இந்த நாட்டில் போற்ற வில்லையா? இது அடாது! ரேடியோவும், மின்சாரமும், டெலிபோனும், சினிமாவும் விஞ்ஞான சாதனங்களல்லவோ? அவைகள் இங்கு இல்லையா. ஏராளமாக உள்ளனவே," என்று கூறலாம். விஞ்ஞான சாதனங்களை நாம் பார்ப்பதற்கும் அனுபவிப்பதற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. மேலாகப் பார்த்தால் சில விஞ்ஞான சாதனங்களைக் கொண்ட நம் நாடும் விஞ்ஞானத்தில் முன்னேறியிருப்பதாகத் தோன்றும். கூர்ந்து கவனித்தால்தான் நம் நாட்டில் எவ்வளவு தூரம் விஞ்ஞானம் போற்றப்படுகிறது என்பது தெரியும். ரேடியோ ஒரு விஞ்ஞான சாதனம். அறிவு முன்னேற்றத்தைக் குறிக்கும் கருவி. அதன் மூலம் இலண்டனில், கல்கத்தாவில், ரெங்கோனில், ருஷ்யாவில், டோக்கியோவில் என்னென்ன நடக்கின்றன என்று தெரிந்துகொள்ளலாம். ஆனால் ஜனங்கள் திருத்தணி, திருப்பதி, திருவாரூர், சிதம்பரம் போன்ற திவ்ய சேஷத்திரங்களையும், ஆங்காங்கு நடக்கிற விழாக்களையும் பற்றித் தெரிந்து கொள்ளக் காட்டுகிற அளவுக்கு ஆசையை, ரேடியோவின் மூலம் லண்டன், கல்கத்தா. ரெங்கோன் ஆகியவைபற்றித் தெரிந்து, கொள்வதில்
காட்டமாட்டார்கள்.

ரேடியோ இருந்து என்ன பயன்? எந்த முற்போக்குக்காக, லட்சியத்திற்காக ரேடியோ கண்டுபிடிக்கப் பட்டதோ, அந்த முற்போக்கு லட்சியம் நம்மவரால் கடைப்பிடிக்கப்படவில்லை. ரேடியோ இருக்கட்டும் திடீரென்று மாலை நேரத்தில் ஆகாயத்தில் விமானம் பறக்கிறது என்று வைத்துக் கொள்வோம். சாலை ஓரத்திலுள்ள பெரியவர் அண்ணாந்து பார்ப்பார். கண்ணில் ஒருவித மிரட்சி தோன்றும். இந்த மாறுதலுடன் அவர் நினைப்புக்கும், ஆகாய விமானத்திற்குமுள்ள தொடர்பு அறுந்துவிடும். அவர் உடனே விமானத்திற்குப் பக்கத்தில் பறக்கும் கருடனைப் பார்ப்பார். பார்ப்பதற்குக் கொடுத்து வைத்தோமே என்று சந்தோஷப் படுவார். கன்னத்தில் போட்டுக்கொள்வார். அத்துடன் நிற்கமாட்டார். தன் பக்கத்திலுள்ள சிறுவனையும் கருடனைப் பார்க்கச் சொல்லி, கன்னத்தில் போட்டுக்கொள்ளச் சொல்லுவார். விமானத்தையும் பார்க்கிறார்; கருடனையும் பார்க்கிறார். கருடனிடம் கவனம் செலுத்துகிற அளவுக்குவிமானத்திடம் காட்டமாட்டார். விமானம் இந்த நாட்டில் ஒரு விஞ்ஞானக் கருவியாக இருந்து என்ன பயன்? மேல்நாட்டில் ஒரு சிறுவன் ஆகாய விமானம் பறக்கிறதைப் பார்க்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் என்ன நினைப்பான்? அதன் வால்

தட்டைப்பார், புதுமாதிரியாக இருக்கிறது. அதில் போட்டிருக்கும் கொடியைப்பார். நம்முடைய தேசத்துக்கொடி. அது என்னுடைய அப்பா கட்டிய விமானம். அதை ஓட்டுபவன் விமானப் படையில் சேர்ந்த அண்ணனா யிருப்பானோ என்றெல்லாம் யோசிப்பான். ஏன்? அவன் நாட்டு நிலையும் நினைப்பும் ஒன்றாய் உயர்ந்திருக்கிறது.

இங்கோ நிலை உயர்ந்திருந்தும், நினைப்பும் உயரவில்லை. மூன்றடுக்கு மாடியில் படிக்கட்டுகளைக் கட்டும் தொழிலாளி நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு உயராதிருந்ததற்கு, அவன் விதியின்பால் கொண்ட நம்பிக்கை காரணமாயிருப்பதைப்போல இந்த நாடு நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு உயராததற்குக் காரணம் மூடநம்பிக்கை. நினைப்பு, நிலை உயர்ந்த அளவுக்கு உயருவதற்கு ஒரே மார்க்கம், பகுத்தறிவைப் பரப்ப வேண்டும். பாடத்திட்டத்திலே நான் முன்பு கூறியதுபோல, பகுத்தறிவைப் புகுத்தும் தீவிரமான ஒரு திட்டம் வகுக்கப்படாத வரையில் பகுத்தறிவும் பரவாது; நமது நினைப்பும் உயராது.

நமது நிலை உலக மன்றத்தின் முன்பு உயர்ந்திருக்கிறது. பிரான்சைவிட, இத்தாலியைவிட, கீரீசைவிட, ஜெர்மனியை விட, ஸ்விட்சர்லாந்தைவிட கீழாகக் கருதப்பட்ட நாட்டிற்கு, ஒரு பொழுதும் சூரியன் அஸ்தமிப்பதில்லை என்ற நிலை பெற்றிருந்த பெரும் சாம்ராஜ்யத்தைக் கொண்டிருந்த பிரிட்டிஷார் 150 வருடமாகஆண்டுவிட்டுக் கடைசியில் மண்ணுக்குரிய மக்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வெளியேறும் பொழுது கொடுக்க வேண்டிய கடன் எத்தனையோ கோடி ரூபாய் - என்றால் இந்தியாவின் நிலை வேறு எந்த நாடும் உயரமுடியாத அளவுக்கு உயர்ந்திருப்பதாகவே பொருள். ஆனால் நிலை உயர்ந்திருந்தும், நினைப்பு உயரவில்லை. சப்மரீனைப் பற்றி. டார்பிடோவைப் பற்றி, சந்திர மண்டலத்திற்குச் செல்லுவது பற்றிய நினைப்பில்லாமல், இந்திய சர்க்கார் சாந்தி பருவ ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள் என்று பத்திரிக்கையில் படித்திருக்கிறோமே அது நினைப்பு உயர்ந்திருப்பதைக் காட்டுகிறதா அல்லது தாழ்ந்திருப்பதைக் காட்டுகிறதா? ஏன் நினைப்பு தாழ்ந்திருக்கவேண்டும்? மனதிலே உள்ள தளைகள் நீக்கப்பட்டுவிட்டால் நினைப்பு இப்படிக் கெடுமா? படித்தவர்கள் மனதிலேயும் தளைகள் இருக்கின்றனவே! அவைகளை நீக்கப் பல்கலைக் கழகத்தார் என்ன திட்டத்தை வைத்திருக்கிறார்கள்?

துணைவேந்தர் இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தால் நிச்சயமாக நான் அவரைக் கேட்டுக் கொண்டிருப்பேன். அவரால் சட்டம் இயற்ற முடியும்; சர்க்காரையே உண்டாக்க முடியும். அவர் சர்க்காரின்

கட்டுத்திட்டங்களுக்கு அடங்கிச் சர்க்காருக்காக மக்கள் நலனை மறக்கிறார். மாணவர்களுக்கு அறிவுச் சுதந்திரத்தை மறுக்கும் நிர்ப்பந்தத்திலிருக்கிறார். அவர் துணிந்து மாணவர்களுக்குப் பகுத்தறிவூட்டும் பாடத்திட்டத்தை வகுக்கலாம். வேண்டுமானால் சர்க்கார் அறிஞர் இரத்தினசாமியைத் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கலாம்; நீக்கட்டும். தமிழ்நாடு துணைவேந்தர் துணை நிற்கும்; கல்வி மந்திரியார் மனமிருந்தால் சரியான ஒரு திட்டம் வகுக்கலாம். மாணவர்களிடம் படிப்பு இருக்கிறது, படிப்பை பாமரர்களுடன் பகிர்ந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது; ஆனால் திட்டம் வகுக்கப்படவில்லை. சமுதாயத்திற்கு உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்திலுள்ள மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பாமரமக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும். முன்னேற்றம், சமாதானம், சமதர்மம், பகுத்தறிவு ஆகிய அழகான வார்த்தைகளின் வாசனைகளை அவர்களும் நுகரும்படி செய்யவேண்டும். இதுதான் அறிவுப் பிரச்சாரம்; அஞ்ஞானத்தை அறவே இந்த நாட்டைவிட்டு ஓட்டும் ஆபத்து மார்க்கம். ஆனால் இந்தப் பணி லேசானதல்ல; நிறைந்தது. எந்த நேரமும் எதிர்ப்பு வரலாம். இதைச் செயலாற்றும் பொழுதுதான் உணரமுடியும்.

ஆகஸ்ட் 15-க்குப் பிறகு இன்னும் சீர்திருத்தம் பேசப்படுகிறது, பாடப்படுகிறது. "ஜாதிபேதமில்லை," "எல்லோரும் சமம்," "எல்லோரும் இந்நாட்டு மன்னர்," "அடிமையென்றும் ஏழையென்றும் யாருமில்லை நாட்டினில்" மதுரமான கீதம், செவிக்கு இனிமையான விருந்து, யாரும் பாடி விடலாம் என்று எளிதில் கூறிவிடலாம், பாட ஆரம்பித்தால் தெரியும். சாரீரம் கெட்டிருப்பதும், மேளம் சத்தம் கேட்காததும், தாளம் ஒத்துழைக்க மறுப்பதும், கீதம் பாடுவதிலே உள்ள கஷ்டத்தைவிட, கீதத்திலே உள்ள கருத்துக்களைத் தேசத்திலுள்ள மக்களுக்குப் போதிப்பதிலே உள்ள கஷ்டம் அதிகம். பகுத்தறிவுப்பிரச்சாரம் செய்ய விரும்புகிறவர்கள் நாட்டுப்புறத்திற்குச் சென்று பார்க்க வேண்டும். இன்னும் சாதி இருக்கிறது, பேதம் போக்கப்படவில்லை; ஆண்டையும் அடிமையும் இருக்கிறார்கள்; வைதீகம் என்னும் நோய் இருக்கிறது; இன்னும் மாறவில்லை என்பதைக் காண்பார்கள். வைதீகம் என்னும் நோய்க்கு டாக்டர்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது. பின் யாரால் அந்த நோயைப் போக்க முடியும் வாலிபப்பருவத்திலுள்ள மாணவர்களால்தான் முடியும். பகுத்தறிவு என்னும் ஒரே மருந்தால் வைதீகம் என்னும் நோயைப் போக்கமுடியுமே தவிர, வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது. பகுத்தறிவுப் பிரச்சாரம் கடினமானதுதான், ஆனால் வாலிபப் பருவத்திலுள்ள

மாணவர்களைவிட வேறு யாரும் லாயக்கானவர்கள் (அந்தப் பணிக்கு) இல்லை. மாணவர்களே கிராமத்திலுள்ள மக்களிடம் அறிவு எடுத்துச் சொல்லுகிற தூதுவர்களாக அனுப்பப்பட வேண்டும். B.A., M.A. பட்டம் பெறும் முன்னோ, பின்னோ ஓர் ஆண்டு மாணவர்கள் சமூகத்திற்குச் சேவை செய்யவேண்டும் என்று சில மாகாணங்களில் சர்க்கார் கொண்டுவரும் திட்டத்தை நான் பாராட்டுகிறேன்! மாணவர்கள் உண்மையிலேயே சமூகச்சேவை செய்ய வேண்டும்; மாணவர்களே கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். கிராமங்களுக்குச் சென்று மக்களுடைய நிலையையும் நினைப்பையும் நேரில் காணவேண்டும். சென்று பார்த்தால்தான் தெரிந்துகொள்ள முடியும். அங்குச் சீர்திருத்ததைப் பற்றி மதுரகீதம்
கேட்கப்படவில்லை; பேதம் போக்கப்படவில்லை. எந்தத் தீங்கும் தீமையும் தீய்க்கப்பட்டதாகக் கருதப்பட்டதோ, அந்தத் தீங்கும் தீமையும் தீய்க்கப்படாமல் இருப்பதைக் காண்பார்கள். எந்த நிலையும் நினைப்பும் நாட்டு மக்களிடம் இருக்கும் என்று கருதினார்களோ அந்த நிலையும் நினைப்பும் அவர்களிடம் இல்லாததைக் காணுவார்கள். எந்த சமூகப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாகக் கருதினார்களோ அந்த சமூகப் பிரச்சினை தீர்க்கப்படாததைக் காண்பார்கள்.

உதாரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து மாணவர்கள் சமூக சேவை செய்வதற்காக வடாற்காடு ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்திற்குச் செல்லுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். மாணவர்கள் அவ்வூர் ஸ்டேஷனை விட்டு இறங்கிக் கிராமத்திற்குள் நுழைகிறார்கள். நுழைந்த மாணவர்கள் அங்குள்ள சில கிராமத்தார்களைப் பார்த்து, "இவ்வூரில் என்ன விசேஷம்" என்று கேட்பார்கள். உடனே "எங்கள் ஊரில் வீடுகள் சுகாதார முறைப்படி கட்டப்பட்டிருக்கும். எங்கள் ஊரில் திருடர் பயமில்லை, எங்கள் ஊரிலுள்ள இளைஞர்கள் பலசாலிகள், ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதில் உள்ள உபாத்தியாயர் கெட்டிக்காரர். ஆண்டுக்கொரு தடவை விளையாட்டுப் பந்தயம் நடத்துவோம். ஒரு பூங்கா இருக்கிறது. ஒரு கண் காட்சி சாலை இருக்கிறது"- இதுவல்ல பதில். அவர்கள் அளிக்கிற பதில் மனதிலே மகிழ்ச்சிக்குப் பதில் திகிலை உண்டாக்கும். அவர்கள் கூறுவார்கள்.

"இந்த ஊரிலே விஷேசங்களா, ஒன்றும் விசேஷமில்லை! ஆனால் அதோ இருக்கிறது பாருங்க அந்தச் சர்க்கார் சாவடி, அதிலே ராத்திரி சரியா 12 மணி 1 மணிக்குப் பிசாசு ஒன்று வரும். அதுகிட்ட அம்புட்டு கிட்டவங்க பிழைக்க மாட்டாங்க; அதற்கு மாணவர்கள் பேயிடம்

நம்பிக்கை இருந்தாலும் "பிசாசாவது ஒண்ணாவது அதெல்லாம் பொய்" என்று சொல்லுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம், உடனே "ஆமாங்க, அப்படித்தான் இங்க ஒருவரு சொன்னாரு, நல்லாப் படிச்சவரு உங்களாட்டமே பேய், பிசாசுகளிடம் நம்பிக்கை இல்லையின்னு சொல்லுவாரு. ஒரு நாள் ராத்திரி அந்தச் சர்க்கார் சாவடியிலே படுக்கப் போகிறேன்னாரு, காலையிலே போய்ப் பார்த்தா செத்து கிடக்காரு. கத்தியால குத்தின மாதிரி வாயாலேயும் மூக்காலேயும் இரத்தம் வந்திருக்கு" என்று கிராமத்தார்கள் கூறுவார்கள். மாணவர்கள் மனதிலே அவர்களுக்குப் பிசாசிடம் நம்பிக்கை இல்லை என்றாலும், அல்லது பயமில்லை என்றாலும், கத்தியும் இரத்தமும் என்று கேட்டதும் அச்சம் தட்டும்; முகம் மாறுபடும், முகம் மாறுபடுவது மாத்திரமல்ல, கிராமத்து மக்களைப் பற்றி மாணவர்கள் மனதிலே கொண்ட நினைப்பும் மாற ஆரம்பிக்கும். ஏன்? அங்கு முதலியார்களைக் காண்பார்கள், படையாச்சிகளைக் காண்பார்கள். பறையர்களைக் காண்பார்கள், சாதி பேதமிருக்கும், சாஸ்திரிமார்கள் இருப்பார்கள். அங்குக் கோயில் குளங்களில் தீண்டாமை அனுஷ்டிக்கப்படும். கிராம மக்களின் நிலை நாம் நினைக்கிறபடி இருப்பதில்லை. நம் நினைப்புக்கும், அவர்கள் நினைப்புக்கும் இடையே பெரும் இடைவெளி இருக்கும். கிராமத்து மக்களைப் பார்த்து மாணவர்கள் வயலைக் காட்டி அதில் என்ன பயிர் என்பார்கள். "அதாங்க, நெல் பயிர், சீரகச்சம்பா இது தெரியாதா? என்பார்கள்.

மாணவர்கள் மேலும் பல பயிர்களைக் காட்டி இது என்ன, அது என்ன என்று கேட்பார்கள். இது கருணை, இது சேனை, இது சீரகம், இது சோளம், இது முள்ளங்கி, என்று கிராமத்தார்கள் சொல்லுவார்கள். மாணவர்கள் கண்ணில் ஒருவித மிரட்சித்தோன்றும்."என்னங்க படிக்கிறேங்கிறிங்க, இதெல்லாம் தெரியலியே" என்பார்கள் கிராமத்தார்கள். மாணவர்கள் கிராமத்து மக்களிடம் பகுத்தறிவு இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள். கிராமத்து மக்கள் மாணவர்களிடம் சாவடிப் பிசாசைப் பற்றியும், கிராமத்துப் பயிர்களைப் பற்றியும் அனுபவம் இருக்குமென்று எதிர்பார்த்தார்கள். இருவர்கள் எதிர் பார்த்ததும், இருவரிடமுமில்லை, எப்படி இருக்கும். எப்படி இருக்க முடியும்? மக்கள் மாணவர்களிடம் இல்லாததை எதிர் பார்க்கிறார்கள். மாணவர்கள் மக்களிடம் இல்லாததை எதிர்பார்க்கிறார்கள். இல்லாததை இருவர்களும் இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இருவர்கள் இருப்பதும் வெவ்வேறு இடம். இருவர்களுக்குமிடையே பெரிய பிளவு, பாலம் கட்டப்படவேண்டும். பாலம், கல்வி அமைச்சர்தான்

மாணவர்களைக் கொண்டு கட்டவேண்டும்.

கிராம மக்களுடைய மனதில் நல்லது இது, கெட்டது இது. உண்மை எது, கற்பனை எது என்று பொருள்களைப் பிரிக்கமுடியாதபடி மாசு படிந்திருக்கிறது. மனதிலே மாசுள்ள அந்த மக்களிடம் படித்துப் பட்டமும் பகுத்தறிவும் பெற்ற மாணவர்கள் நன்மையிது, தீமையிது, கற்பனை எது, உண்மை எது, என்று பொருளைப் பிரித்துக்காட்டி அறிவுப்பிரசாரம் செய்தாலோ, அவர்கள் சொல்லுவதை நம்புவதில்லை. கிராம மக்களிடம் இது இது கற்பனை என்று எடுத்துக்கூறிவிட்டால் உடனே, அவர்கள் கற்பனையைக் கைவிட்டுவிடுவார்கள். உண்மையைப் பின்பற்றுவார்கள். இவர்கள் ஏதோ பிரமாதப் படுத்துகிறார்கள் என்று நமது பகுத்தறிவுப் பிரசாரத்தைப் பற்றிப் பரிகாசமாகப் பேசுகிறவர்கள் பிரசாரம் செய்து பார்க்க வேண்டும். அவர்கள் பக்கத்திலுள்ள ஊர், வல்லம் படுகைக்குப் பிரசாரத்திற்குச் செல்லுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். கிராமப் பிரசாரத்திற்குச் சென்றவர்கள் கிராமத்துத் தலைவரை அணுகி நாங்கள் உங்கள் ஊரில் பிரசாரம் செய்ய விரும்புகிறோம். நீங்கள் தயவுசெய்து கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று கேட்பார்கள். உடனே கிராமத்துத்தலைவர் பிரசாரர்களைப் பார்த்துக் கேட்பார். "நீங்கள் படித்தவர்கள் என்று சொல்லுகிறீர்களே – படித்தவர்களுக்கு வைக்கும் பரீட்சையைப் பாருங்கள் - உங்களுக்குப் பாரதம் தெரியுமா? பிரசாரர்கள் தெரியாது என்றவுடன் அப்ப ராமாயணம் தெரியுமா?" என்று கேட்பார். இவர்கள் நாங்கள் படித்ததில்லை என்பார்கள். கிராமத்துத் தலைவர் உடனே சொல்லுவார். 'உங்களுக்குப் புராணங்களிடம் நம்பிக்கை யில்லை என்று சொல்லுங்க. நீங்கள் இராவணனுக்கு 10 தலை என்பது கவியின் கற்பனையாகத் தானிருக்க வேண்டும் என்று கூறுவீர்கள். கிராமத்துத் தலைவர். உடனே முடிவுகட்டி விடுவார்.

இவர்கள் ஒன்று இராமாயணம் படிக்காதவர்களாயிருக்க வேண்டும் அல்லது இப்படி ஈரோட்டுபக்கம்போய் வந்திருக்க வேண்டும். என்று கிராமத்து மக்கள் எந்த விளக்கத்தைத் தந்தாலும் நம்பமாட்டார்கள்; நம்பக் கூடாததை நம்புவார்கள்; தெரிந்துகொள்ள அவசியமில்லாததைத் தெரிந்துகொண்டிருப்பார்கள்; தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள். அவர்களை நீங்கள் கேட்டுப்பாருங்கள். அமெரிக்காவின் தலைநகரம் எது தெரியுமா? தெரியாது. ருஷ்யாவின் தலைநகரம் எது? தெரியாது. பெர்லின் எங்கு இருக்கிறது, தெரியுமா? தெரியாது. பிரிட்டனின் பிரபல தொழிற்சாலை எது தெரியுமா? தெரியாது. மடகாஸ்கர் எங்கிருக்கிறது, தெரியுமா?

தெரியாது. கடலுக்குள் போகிற கப்பல் தெரியுமா? தெரியாது. சரி, எமதர்மனுடைய வாகனம் எது தெரியுமா? "அதாங்க எருமைக்கடா" என்று கூறுவார்கள். எப்படி இருக்கிறது அவர்கள் அனுபவம்? எவ்வளவு வேறுபாடு நம்முடைய நினைப்புக்கும் அவர்களுடைய நினைப்புக்கும்? பிரபல தலைநகரங்களைப் பற்றி, பிரபல தொழிற்சாலைகளைப் பற்றி, பிரபல விஞ்ஞான சாதனங்களைப்பற்றி, தெரிந்து கொண்டிராதவர்கள் மேலோகத்திலுள்ள எமனுடைய வாகனத்தைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொள்ளாதது பற்றி வெட்கப்பட மாட்டார்கள்; தெரிந்து கொள்ள ஆசைப்படவும் மாட்டார்கள். அவர்களை இடைவிடாத பிரசாரத்தால் திருத்த வேண்டும்.

அவர்களிடத்திலுள்ள வைதீகத்தை விரட்டி அடிக்கப் பகுத்தறிவை ஆயுதமாக உடைய மாணவப்படையினால்தான் முடியும். அந்தப் படையை இந்தப் பல்கலைக்கழகம்தான் கொடுக்க வேண்டும். கொடுக்கவேண்டிய பொறுப்பு பெரிது, கடைசியாக எல்லோராலும் கைவிடப்பட்ட கேசு (case) உங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது, குணப்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கையில், மூடநம்பிக்கையுள்ள மக்களைத் திருத்த டாக்டர்களால் முடியவில்லை; உத்தியோகஸ்தர்களால் முடியவில்லை; ஊராள்வோர்களால் முடியவில்லை; அமைச்சர்களால் முடியவில்லை; கவிஞர்களால் முடியவில்லை; ஒரு காலத்திலே ஆலமரத்தடியில் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள தொடர்பு பற்றி ஆராய்ந்தார்கள் என்று கூறப்படுகிற காலத்தில்கூட யாகத்தால் முடியவில்லை; வேதத்தால் முடியவில்லை; சித்தர்களால் முடியவில்லை; ரிஷி சிரேஷ்டர்களால் முடியவில்லை. ஒரு காலத்திலும் ஒருவராலும் முடியவில்லை. மனிதனை மனிதனாக்க; மனிதனிடமிருந்து மிருகத்தனத்தைப் பிரிக்க, மனிதனை தேவனாக்க, எண்ணத்திலுள்ள இருளைப் போக்க, மனவளத்தை உண்டாக்க; அவர்களால் சாதிக்க முடியாததை நீங்கள் சாதிக்க வேண்டும். பிரசாரம் செய்ய வேண்டும்; நீங்கள் கோபுர வாசலிலே உள்ள நோயாளிகளிடம் செல்ல வேண்டும்; கோபுர வாசலிலே உள்ளவர்களிடம் மாத்திரமல்ல. கடைவீதியில் உள்ளவர்களிடத்திலும் செல்ல வேண்டும்; கடைவீதி உள்ளவர்களிடத்தில் மாத்திரமல்ல, நடைபாதையில் உள்ளவர்களிடத்திலும் செல்லவேண்டும். நடைபாதையில் உள்ளவர்களிடத்தில் மாத்திரமல்ல, ஆலைத் தொழிலாளிகளிடத்திலும் செல்லவேண்டும். ஆலைத் தொழிலாளிகளிடத்தில் மாத்திரமல்ல, விம்மி விம்மி அழுகிற

விதவைகளிடமும் செல்ல வேண்டும், வீபரீத எண்ணத்திற்காக அல்ல, அவர்களை விடுவிக்க அவர்கள் எல்லோரிடத்திலும் சமயம் வாய்த்த போதெல்லாம், அறிவுப்பிரசாரம் செய்யவேண்டும்.

முன்னாள் நிலையும் நினைப்பும் உயர்ந்திருந்ததையும் இந்நாள் நிலையும் நினைப்பும் தாழ்ந்திருப்பதையும், தாழ்ந்ததை உயர்த்த வேண்டிய தேவையைப் பற்றியும் எடுத்துக்கூறவேண்டும். எப்படியும் மூடநம்பிக்கை நீக்கப்பட வேண்டும். பிறகு நல்ல எண்ணங்களைத் தூவினால்தான் அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்திலும் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.

நீங்கள் ரயிலில் செல்லும்பொழுது கவனித்திருக்கலாம். உங்களுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தாரிடம், ஏறிச் செல்லுகிற ரயிலைப்பற்றி, ரயில் கண்டுபிடித்தவனைப் பற்றி, கண்டுபிடித்த காலத்தைப் பற்றி, ரயில் எப்படி ஓடுகிறது என்பதைப் பற்றி, ஓடிக்கொண்டிருக்கிற ரயிலை ஒரு நொடியில் எப்படி எதிரே உள்ள கைப்பிடியால் நிறுத்தலாம் என்பதைப் பற்றிக் கூறுங்கள். ஜன்னல் வழியாக எதையோ கவனித்துக் கொண்டு காதில் விழாததுபோலவே இருப்பார். ஆனால் கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஜன்னல் வழியாகத் தெரியும் ஒரு குன்று, குன்றின்மேல் தெரியும் கோபுரம். கோபுரத்தின் மேல் தெரியும் விளக்கு, அவைகளைக் கவனித்துப் பார்ப்பார். உடனே பக்கத்திலுள்ளவரைப் பார்த்துக்கேட்பார் - தூங்கினாலும் தொடையைக்கிள்ளிக் கேட்பார் - அது என்ன கோயிலுங்க! என்று,

விஞ்ஞானம் இந்த நாட்டில் மதிப்பற்றிருப்பதுபோல வேறு எந்த நாட்டிலும் மதிப்பற்றிருக்காது. நான் இதோ பேசுகிறேன்; என் முன் ஒலி பெருக்கி இருக்கிறது, அது நான் பேசுவதைப் பெரிதாக்கி நாலா பக்கத்திலுள்ள பலரும் கேட்கும்படிச் செய்கிறது. அது எப்படி வேலை செய்கிறது என்று கூறிப்பாருங்கள்; மேட்டூர் அணைக்கட்டை எப்ப கட்டியிருக்கிறார்கள் என்று கூறிப்பாருங்கள். கப்பல் எப்படி கனமாயிருந்தும் அது எப்படி கடலில் மிதக்கிறது என்று கூறிப்பாருங்கள்; ஏரோப்ளேன் எப்படி பறக்கிறது என்று கூறிப்பாருங்கள்; அல்லது எந்த ஒரு விஞ்ஞான சாதனத்தைப் பற்றியாவது கூறிப்பாருங்கள். ஆச்சரியமாக கேட்க மாட்டார்கள்; அவைகளில் அதிசயமிருப்பதாவும் அவர்களுக்குத் தோன்றாது. அப்படிக் கொஞ்சநேரம் கேட்டாலும் அதை மறுகணமே மறந்து விடுவார்கள்.

'அற்புத சக்தியிடம்' உள்ள அபார நம்பிக்கையும் மதிப்பும் அவைகளிடமிருக்காது. ரேடியோவைப் பற்றிக் கூறுங்கள்; ஒருவர் இலண்டனில் பேசுவதை நாம் கேட்கலாம் என்று கூறுங்கள்; டெலிவிஷன் மூலம் மாஸ்கோவில் ஆடும் ஒரு மாதைப் பார்க்கலாம் என்று கூறுங்கள். எதோ கேட்பார்களே ஒழிய அதில் ஆச்சரியம் இருப்பதாக நினைக்கமாட்டார்கள். கூறும்பொழுது அப்படியா! என்று சொல்லுவார்கள்! அவ்வளவுதான். இவ்வளவையும் கேட்டுவிட்டுத் திடீரென்று சொல்லுவார்கள், "நீங்கள்! இதெல்லாம் ஆச்சரியம் இருப்பதாகக் கூறுகிறீர்கள்! என்ன ஆச்சரியம் இருக்கிறது? அங்கே ஒரு வேப்பமரமுங்க, அதன் மகிமை, காயெல்லாம் கசக்காமல் தித்திக்குதுங்க! ஜனங்க கூட்டம் கூட்டமாகப் போறாங்க" என்று சொல்லுவார்கள்.

விஞ்ஞானத்திடம் இப்படி ஏன் அவர்களுக்கு மதிப்பு இருப்பதில்லை? காரணம் எந்த விஞ்ஞான சாதனத்தையும் இவர்கள் சிரமப்பட்டுக் கண்டுபிடிக்கவில்லை. பென்சிலினைக் கண்டுபிடித்தவர் எங்கள் அப்பா, அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் எங்கள் அண்ணன், ரேடியோவைக் கண்டுப்பிடித்தது எங்கள் தாத்தா, மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர்கள் எங்கள் மூதாதையர் என்றிருந்தால் அதன் அருமை தெரியும். எவ்வளவு சிந்தனை, எத்தனை இரவுகள் விழித்து எதிர்ப்பைப் பார்க்காமல், கேலி, கண்டனங்களைப் பொருட்படுத்தாமல், ஆபத்துக்கு அஞ்சாமல் மூளை குழம்புமே, கண் குருடாகுமே, கால் முடமாகுமே என்று யோசிக்காமல் கஷ்டப்பட்டு விஞ்ஞான சாதனங்களைக் கண்டுபிடித்தவர்களெல்லாம் மேல் நாட்டார்கள்.எனவேதான் அவர்கள் விஞ்ஞானத்தைப் போற்றுகிறார்கள்.

அவர்களுக்கு அதன் அருமை தெரிகிறது. அதனிடம் அதிக மதிப்பு வைத்திருக்கிறார்கள். இவர்கள் எந்தச் சாதனத்தைக் கண்டுபிடிக்கவும் கஷ்டப்படவில்லை; கஷ்டப்படாமல் சுகம் எப்படித்தெரியும், ஆதலால்தான் இவர்களுடைய நாக்கில் ஏரோப்ளேன் கண்டுபிடித்தவர்களுடைய பெயர்கள் நர்த்தனமாடுவதில்லை. ரயில் கண்டுபிடித்தவர்களுடைய பெயர்கள் நெஞ்சில் நடமாடுவதில்லை. விஞ்ஞானம் இந்த நாட்டில் விழலுக்கிறைத்த நீராகிவிட்டது. பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டிபோல, செவிடன் கேட்ட சங்கீதம்போல விஞ்ஞானம் மதிப்பற்றிருக்கிறது.

மதிப்புற்றிருக்க வேண்டிய பொருள் மதிப்பற்றிருப்பது நல்லதல்ல? விஞ்ஞானம் மதிப்புப் பெற மாணவர்கள் உழைக்க வேண்டும். மாணவர்கள் மக்களிடம் சென்று அவர்கள் மனதிலே உள்ள மாசை

நீக்கவேண்டும். மனதிலுள்ள மாசை நீக்கிப் பகுத்தறிவைப் பரப்பிவிட்டுப் பிறகு விஞ்ஞானத்தைப் பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் மனம் தெளிவடைவர்; அறிவைப் போற்றுவார்கள்; அஞ்ஞானத்தைக் கைவிடுவார்கள், உண்மையைநம்புவார்கள், பொய்யை நம்பமாட்டார்கள்.

இதுவரை நான் பொதுவாக இந்தியா - குறிப்பாக – தமிழ்நாடு மக்கள் நினைப்பு, நிலை உயர்ந்த அளவுக்கு உயரவில்லை தாழ்ந்திருக்கிறது என்பதையும், தாழ்ந்ததை உயர்த்தப் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்ற ஒரே மார்க்கந்தான் உண்டென்றும். மாணவர்கள்தான் அம்மார்க்கத்தைக் கடைப்பிடிக்கத் தகுதியானவர்கள் என்றும், உடனே சர்க்கார் மக்களுக்கு மாணவர்கள் அந்தப் பணியை வெற்றிகரமாக செய்து முடிக்க ஒரு திட்டம் வகுக்க வேண்டும் என்றும் கூறினேன். ஆகையால் சர்க்கார் பகுத்தறிவுப் படையைக் கிளப்ப வேண்டும்; அந்தப் படையைத் தடையில்லாமல் இந்தப் பல்கலைக்கழகம் தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அப்படை இங்கு உண்டு, அப்படையினர் நன்கு படித்தவர்கள், பண்புள்ளவர்கள், நல்ல பிரச்சாரப் பழக்க முள்ளவர்கள்; பகுத்தறிவை ஆயுதமாக உடையவர்கள்; பயமறியாதவர்கள்; இவர்களால்தான் வீழ்ந்த சமுதாயத்தை உயர்த்த முடியும். இதுதான் ஒரேபடை, இதுதான் கடைசிப்படை இப்படை வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

"இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்ற மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை மணிமொழியைக் கூறி எனது உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.
………………………………..

## ஏ, தாழ்ந்த தமிழகமே!

புரட்சியின் சிகரம்

தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே!!

மிக உற்சாகத்துடன் ஒரு கவிக்கும் (பாரதிதாசன்) ஒரு பேராசிரியருக்கும் (பேராசிரியர் கா. சு. பிள்ளை) சிறந்த முறையிலே பாராட்டுதல் நடத்துகிற இந்த உங்கள் சம்பவத்திலே, நான் கலந்துகொண்டு

பேசுவதற்கும், இதில் பங்கு எடுத்துக் கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கும் எனது மகிழ்ச்சி. இந்த நிகழ்ச்சி ஒரு சில நாட்களுக்கு முன்பே நடந்திருக்க வேண்டும்; பல வேலையின் காரணமாக நான் வரத்தவறியதால் முடியவில்லை; அதற்கு மன்னிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு என்னை அறிமுகப்படுத்திய தோழர் தண்டபாணி அவர்கள் பலபடச் சொல்லிட்டார். அவர் என்னைப் புரட்சியின் சிகரம் என்றார். புரட்சி இவ்வளவு குள்ளமாயிராது. புரட்சியின் சிகரம் என்றால் அது இங்கே அமர்ந்து இருக்கும் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களுக்குப் பொருந்தும். அவர் மிகவும் உயரமானவர். ஆகவே, நான் புரட்சியின் சிகரத்தின் பக்கத்தில், மலைச் சாரலில் நின்று கொண்டு, ஏதோ சில பேசலாமென்றிருக்கிறேன்.

ஒரே இனம்

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அளித்த கவிதைகளை நான் பார்த்திருக்கிறேன்; படித்துமிருக்கிறேன் என்பதற்காக மட்டுமல்ல நான் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைக்கப் பிரியப்படுவது. புரட்சிக் கவியும் நானும் ஒரே இனம்; ஒரே இனக் கொள்கை உடையவர்கள். பொது மக்கள், துர்ப்பாக்கியவசமாக அவர் நாட்டுக்கு ஆற்றுகின்ற தொண்டைப் பற்றி நினைக்காவிட்டாலும், ஒரு சிறு நன்றியாவது செலுத்தாவிட்டாலும், பல மாணவர்களின் உள்ளங்களில் பாரதிதாசன்மேல் அன்பு ஊடுருவிப் பாய்ந்து அவருக்கு இப்படிப்பட்ட பாராட்டுதல் விழா நடத்துவது பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் மகிழ்ச்சியுடன் ஆச்சரியமும் கலந்து வருகிறது. பல படித்தவர்கள், கட்சிக் கொள்கைகளைப் பரப்புபவர் என்று கூறுகிறார்கள். புரட்சிக்கவியைப் பற்றிக் குறிப்பிடும்போது, தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டியது போல, கவிஞர் மாத்திரம் 'ஒரு கட்சியின் கவி; குறிப்பிட்ட கொள்கைக்காகத் தமது கற்பனா சக்தியையே பாழ்படுத்துகிறவர், வகுப்பு வாதத்தை வளர்க்கிறவர்; நாத்திகர்' என்று மாத்திரம் ஒரு சிலரால் தூற்றப்படாமல் இருந்தால், அவரது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும். அவர் அப்படியே இருந்தாலும் இருப்பதற்குக் காரணம் அவரது இயற்கையல்ல. இந்தத் துரதிர்ஷ்டவசமான நாட்டிலே நானாவிதமான கட்சிகள் நடமாடுகின்றன. அக்கட்சிகள் என்னும் கூடாரத்திலே கவிகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்ற, வெட்ட வெளியிலே கொண்டுவந்து உலவச்செய்ய, தமிழர்களுக்குப் போதிய உள்ளம் இருக்குமானால், நாங்கள் தடை சொல்லமாட்டோம். அந்தக் கட்சிக்கவி என்று சொல்லப்படுபவரிடம் சொல்பவர்கள், கட்சி

பேதமின்றிக் கவி என்பதற்காக மட்டும் அன்பு செலுத்தினால் போதும், இன்பம் பெறலாம்.

<u>எதற்காக?</u>

புரட்சிக் கவிஞரின் கருத்தோவியங்களைப் பற்றி அறிஞர் சிதம்பரநாதனைப் போன்றவர்கள்தான் பேசுவது பொருத்தமாகும். ஆனால், என்னைப்போல் அவரது கொள்கையைக் கடைப்பிடித்து, நண்பர் தண்டபாணி குறிப்பிட்டதுபோல் அவருக்குத் தோழனாகவும் இருந்து, அவரது கருத்துக்களை ஏட்டிலே தீட்டியும், நாட்டிலே பேசியும், செயலிலே காட்டியும் வருபவர்கள் உரிமைக்காகப் பேசலாம். ஆகவே நானும் உரிமைக்காகக் கவிஞரின் படத்தைத் திறந்து வைக்க அருகதையுள்ளவன். அப்படித் திறந்து வைக்கும்போது, கவி கண்ட நுட்பத்தைப் பற்றியோ, கலைநயத்தைப் பற்றியோ காவிய ரசத்தைப் பற்றியோ அல்லது அவற்றுக்கு விளக்க உரையோ, விரிவுரையோ கருப்பொருளோ, பருப்பொருளோ கொடுக்க அல்ல, நான் பேச இருப்பது.

<u>நல்ல காலம்</u>

இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சியினராயினும் செய்கின்ற தொண்டு தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பயன்படுகிற தென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக் கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகின்றான். பாராட்டுகிறான்; பரிசளிக்கிறான். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக் காட்டு.

<u>இதற்கு முன்</u>

இதற்கு முன்பெல்லாம், கடந்த 10, 15 ஆண்டுகளாக, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தது கிடையாது. கவிகளை மக்கள் கனவிலுங்கூடக் கருதினாரில்லை. தமிழுந் தன்னந் தனியே தமிழரை விட்டுப் பிரிந்து உலவிற்று. உதாரணமாக, அப்பொழுதெல்லாம் தமிழ் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எவ்வளவு தொடர்பு இருந்ததென்றால், முருகனுக்கும் தெய்வயானைக்கும் எவ்வளவோ அவ்வளவு. தமிழ்ப் பண்டிதர்களுடைய நிலையே தனி. அவர்கள் சரிந்த தலைப்பாகையும், உலர்ந்த கண்களும், ஒட்டிய கன்னங்களும் வீட்டில்

அரைடஜன் குழந்தைகள் என்ற எண்ணமும், குறைந்த ஊதியமும் அவர்களைப் பரிதாபகரமான நிலையிலே கொண்டுவந்து நிறுத்திற்று. அதிக ஆற்றலிருந்தும், ஆங்கிலம் கற்காத காரணத்தால் நிலை தாழ்ந்தது. தமிழனுக்குத் தாய் மொழியைப் கற்றுக் கொடுத்த காரணத்திற்காகச் சம்பளம் குறைந்தது. அவர்களை இகழுவது, தள்ளி வைப்பது ஆகியவற்றின் பிரதிபலிப்பு மாணவர்களிடையேயும் தென்பட்டது. தமிழ் வகுப்பு என்றால் இஷ்டப்பட்டால் போகிற வகுப்பு என்று நினைத்தார்கள். தமிழ் வகுப்பு நடந்து கொண்டேயிருக்கும். தெய்வயானையை விட்டு விட்டு வள்ளியைத் தேடிக் கொண்டு முருகன் போவதுபோல், மாணவர்கள் வாத்தியாரை விட்டு விட்டு வெளியே போய்விடுவார்கள்.

ஆனால் அந்த நிலை இன்று மாறிவிட்டது. எங்கு சென்றாலும் தமிழ், தமிழர் என்ற பேச்சுகளையே நான் பார்த்திருக்கிறேன். ஓரிரண்டு ஆண்டுகளாக ஆங்கிலத்திலேயே பேசுவேன் என்று சபதஞ் செய்து கொண்டிருந்தவர்கள்கூட, 'இன்று தமிழிலேயே பேசுவேன்; தமிழிலேயே எழுதுவேன்; எண்ணுவேன்' என்று சொல்வதை. தமிழிலே கவிதைகள்; தமிழிலே நாடகங்கள்; தமிழிலே இசைகள். இவற்றை யாரும் எங்கு சென்றாலும் பார்க்கலாம். நேற்றுக் கூப்பிட்டிருந்தால் 'வர மாட்டேன்' என்று இன இறுமாப்புடன் இருந்திருப்பவர்கள் கூட, இன்று தாமும் தமிழர், தமிழர் இனம் என்று சொல்லிக் கொள்ளமுற்படுகிறார்கள். ஆனால், இந்த நிலை என்றும் மாறாமல் நிலைத்திருக்குமா?

## நேற்றைய உறக்கம் இன்றைய விழிப்பு

என்ன! இவ்வளவு நாளுமில்லாததோர் வியப்பு, ஓர் உணர்ச்சி, தாய்மொழிப்பற்று, தன்னினப்பற்று, தமிழர்களிடையே ஏற்பட்டதற்கு, தமிழன் தன்நிலை உணரவந்ததற்குக் காரணம், இந்தப் புரட்சிக்கவி பாரதிதாசன் நேற்று இல்லை; இன்று, இருக்கிறார் என்று சொல்லுவேன் என்று நீங்கள் கருதினால் அப்படிச் சொல்பவனல்லன். அவருக்கு முன்னால் இருக்கும் பெயரே, அவருக்கு முன் மாபெருங்கவி பாரதியார் இருந்தார் என்பதை நினைவூட்டுகிறது. கவிகளும் புலவர்களும் இதற்கு முன் இருந்த இழிநிலைக்கும், தமிழனிடம் தமிழர் பற்றுக் கொள்ளாதற்கும் காரணம் : தமிழ்நாடு என்றால், அது குறுகிய மனப்பான்மை என்றும், தமிழ்மொழி என்றால் அது உத்தியோகத்திற்கு லாயக்கானதல்ல வென்றும், தமிழ் படித்த ஒரு சில வட்டாரங்களிலே உலவி வந்ததும், தமிழ்நாட்டின் எல்லையைக் குறித்தால், தமிழனுடைய தனித்தன்மையைக் குறித்தால், நாம் நாட்டுக்குச் செய்கின்ற

நாசகாரியங்கள் என்றும் தவறாக, தெரியாமல், பாமரர்களும், படித்தவர்களும் கருதினதும் தான் ஆகும்.

தெரிந்து, பாமரர்களுக்கப் பரிந்து பேசுவது போல, நடிக்கும். நயவஞ்சகர்கள் நாட்டிலே உண்டாக, எத்தர்களும், ஏமாளிகளும் ஏற்பட்டனர். ஏமாற்றி வாழ்பவன் எத்தன். ஏமாறுபவன் ஏமாளி. தன்னுணர்வு அற்ற மக்களால் தமிழும், தமிழ் அறிஞர்களும், போற்றப்படாமல் மூலை முடுக்குகளிலே தூங்கிக் கிடந்தனர்.

ஆனால் இன்று, தூங்குகிறவர்களைத் தட்டி எழுப்புகின்றனர். துக்கப் படுகிறவர்களுடைய துயரத்தைத் துடைக்கின்றனர். தேம்பித் திரியும் கவிவாணர்களைத் தேடிப்பிடித்து அவர்களை மார்போடு அணைத்து உச்சி மோந்து முத்தம் கொடுத்து உள்ளம் பூரிக்கின்றனர். இவனா, இவன் என் இனத்தவன். அது தமிழா? அமிழ்தினு மினியதல்லவா? அவனா, அவன் ஓவியக்காரன்; அவன் ஓவியங்கள் ரவிவர்மா படத்துடன் போட்டியிடும். அவன் தமிழிசைவாணனா? தமிழிசை எந்த விதத்திலும் தெலுங்கைவிடக் குறைந்த தல்லவே! அவன் நடனக்காரன்; அவனது நடனம் வடநாட்டு நடனத்தைவிட ரம்யமாக இருக்கும்! அவன் நடிகன், மேல் நாட்டு நடிகனும் அவனிடம் தோற்றுவிடுவான். தமிழ்நாட்டு நடிகன் நமது இருதயத்தைத் தான் நடிக்கும் நாடக மேடையாக்கிக் கொள்கிறான். அவன் கவிஞன், அவன் பாக்களில் ஓர் அடிக்கு, மேல் நாட்டிலே, ஓராயிரம் பொன் கொடுப்பர் என்று இன்று தமிழ் அறிவாளிகளை, சிற்பிகளை, சிந்தனையாளர்களை, கவிஞர்களை. கலைவாணர்களைத் தமிழகம் போற்றுகின்றது. இந்த நிலை நேற்று இல்லை; இன்று இருக்கிறது; நாளை நீடித்திருக்க வேண்டும். நிலைத்திருந்தால்தான், ஒரு பாரதிதாசன் அல்ல; எண்ணற்ற பாரதிதாசர்கள் தோன்றுவார்கள். அவர்களைக் கண்டு, அவர்கள் காட்டிய வழிகளைத் தமிழகமும் தமிழரும் பின்பற்றிப் பயனடைய ஏதுவாகும்.

சங்க இலக்கியம்

கவிஞர்களையும், மற்றவர்களையும் அன்று போற்றாததற்கும், இன்று போற்றுதற்கும் இன்னுமொரு காரணமுண்டு. சங்க இலக்கியங்களிலே, நமது கண்ணும் கருத்தும் படாதபடி திரையிட்டு வந்தார்கள். உங்களில் பலர் சங்க இலக்கியங்களைப் படித்திருக்கலாம். சிலர் புரிந்து கொண்டிருக்கலாம்; சிலர் புரிந்தது போல் பாவனை காட்டலாம். நான் சங்க இலக்கியங்களைப் படித்தவனல்லன். அல்லது படித்தவனைப் போலப் பாவனை செய்பவனுமல்லன். அதற்காக வெட்கப்படப்

போவதுமில்லை. சங்க இலக்கியங்களை நான் படிக்கவில்லை என்றால், அதற்குக் காரணம் எனது அறியாமையல்ல. என் கண்முன் சங்க இலக்கியங்கள் நர்த்தனமாடவில்லை. என் கண்முன் அவற்றைக் கொண்டு வந்து புலவர் பெருமக்கள் நிறுத்தவில்லை.

யார் அணுகுவார்கள்?

நாவலர்களும், பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலுபக்கமும் வேலி அமைத்து, இங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பி வைத்துக் கொண்டும் "உள்ளே ஆடுது காளி, வேடிக்கைப் பார்க்க வாடி" என்பது போலத் 'தொல்காப்பியத்தைப் பாரீர். அதன் தொன்மையைக் காணீர்' என்றால் அதனிடம் யார் அணுகுவார்? சங்க இலக்கியங்களை வீட்டை விட்டு வெளியேற்றி, நாட்டிலே நடமாடவிட வேண்டும். நடன சுந்தரிகளாகச் சிறுசிறு பிரதிகள் மூலம். தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால்தான் தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருவருடைய மடியிலேயும் மனத்திலேயும் தவழும். ஒவ்வோர் இல்லமும் இலக்கியப் பூங்காவாகக் காட்சியளிக்கும். இன்றையப் புலவர்கள். உண்மையிலேயே இனிமையையும், எளிமையையும் சங்க இலக்கியத்துடன் சேர்த்து மக்களுக்கு ஊட்டியிருப்பார்களானால், சங்ககாலப் புலவர்களைப் போற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கு மானால், அவர்கள் ஒவ்வொர் இல்லத்தையும் இலக்கியப் பூங்காவாக்கும் உழவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்படியில்லை என்பதை நினைக்கும் பொழுதுதான் அவர்கள் இவ்வளவு நாள்களாக நாட்டுக்குச் செய்தது தொண்டு அல்ல; துரோகம் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

கம்பனா? இளங்கோவா?

புலவர்கள் தாங்கள் நன்மை செய்வதாய்க் கருதிக் கொண்டு, ஒரு சில புலவர்களையும், கவிகளையுமே பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தியும், பொது மக்களின் பாராட்டுதலுக்கு அந்தச் சிலரே அருகதையானவர்கள் என்று சொல்லியும் வருகிறார்கள். அதன் மூலம் உண்மைக் கவிகள், உயிர்க் கவிகள் சங்ககாலப் புலவர்கள் மறைக்கப்படுகிறார்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால், கம்பனை எந்த அளவுக்குப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்களோ, அந்த அளவுக்குச் சங்ககாலப் புலவர்களை அறிமுகப் படுத்தவில்லை. கம்பனைத் தெரிந்த பொதுமக்கள்தாம் அதிகம் இருப்பார்களே தவிர, இளங்கோவைப் பற்றித் தெரிந்தவர்கள்

கொஞ்சமாகத்தான் இருப்பார்கள். வேண்டுமென்றால், தில்லையில் ஓர் ஓட்டுப் பெட்டியை வைத்துப் பிரசாரமில்லாமல், அப்படி இருந்தால் இரு பக்கமும் நடத்தி, கம்பனுக்கும், இளங்கோவுக்கும் ஓட்டுப்போடச் சொன்னால், தேர்தலில் கம்பன்தான் வெற்றி பெறுவான். ஆனாலும் நாம் நமது கற்பனா சக்தி முன்பு இருவரையும் நிறுத்திப் பேசச் சொன்னால், கம்பர் இளங்கோவைப் பார்த்து 'எனக்கு உயிர் ஊட்டிய உத்தமரே!' என்பார்; 'எனக்கு அணி அழகு தந்த ஆணழகரே' என்பார்.

<u>திரைபோட்டு விட்டனர்</u>

அகத்தையும், புறத்தையும் அதிலே காட்டப்பட்ட கருத்துகளையும், அணிகளையும், உவமைகளையும் நாம் அறியாமற் போனதற்குக் காரணம், பத்திரிக்கைகள் ஒரு கவியைப்பற்றியே புகழ்வதும் ஒரு சில கவிதைகளிலேயே இது எவ்வளவு பழமையில் அழுந்தியிருந்த போதிலும், புதுமை மிளிர்வதாகவும், ரசம் ததும்புவதாகவும் விளம்பரப்படுத்துவதும், மிதிலைச் செல்வியைப் பற்றியும் கோசலைச் செல்வனைப் பற்றியும் மாதாந்தர புத்தகங்களும் வெளியீடுகளும், ஆண்டு மலர்களும், பிரத்தியேகப் புத்தகங்களும் வெளியிடுவதுதான் ஆகும்.

கம்பரையும், சேக்கிழாரையும் அடிக்கடி பலப்பல நிறங்களில் காட்டுவதன் மூலம் - கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் தத்துவார்த்தங்களாலும், புதுமைக் கருத்துக்களாலும் காட்டி நிலைநாட்டுவதன் மூலம் வள்ளுவனை மக்கள் அதிகம் காண முடியவில்லை. அகநானூற்றையும், புறநானூற்றையும் மக்கள் மறக்க நேர்ந்தது. கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகையைக் கற்றவரிடம் காண்பதே அரிதாகி விட்டது. பரிபாடலைப் பார்க்கவே முடியவில்லை. ஆகவே, சங்க இலக்கியங்கள் மங்கி, மக்களுடைய மனத்தைப் பெறாமல் போனதற்குக் காரணம் அந்தச் சங்க இலக்கியக் கர்த்தாக்களைக் காண முடியாதபடி நமது கண்முன் திரை போட்டு விட்டார்கள். ஒரு சிலரையே மீண்டும் மீண்டும் அறிமுகப் படுத்துவன் மூலம், பொது மக்களுடைய ஆதரவைப் பெற முடியும்; குறிப்பிட்ட திட்டம் நிறைவேறும்; மக்களுடைய மனத்தை மாசற்ற கவிகளின் மீது பாய விடாமல் மருண்ட பாதைக்கு இழுத்துச் சென்றால்தான் என்ன! எதிர்க் கட்சியினருக்கு மட்டமா அல்லவா என்று பார்த்துக் கொண்டால் போதும் என்றெண்ணிவிடும் நயவஞ்சக நாசக்காலர்கள் நாட்டிலே உலவி வருகிறார்கள்.

<u>பிரசாரம்</u>

கம்பனுக்குப் பிறகு எவ்வளவு கவிவாணர்கள் தோன்றினாலும், கம்பனுக்கு முன் பலர் இருந்த போதிலும், அவர்கள் வெறும் கவிகளாயிருக்கலாம்; ஆனால் கவிச் சக்ரவர்த்தி கம்பன் தான் என்று சிலர் சொல்லுகிறார்கள். கவிதை எவ்வளவு புரட்சிகரமாயிருந்த போதிலும், கவிதை காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் கருவியாக இருந்த போதிலும், அவற்றை இயற்றியவர்களைக் கவிச்சக்கரவர்த்தி என்று சொல்லமாட்டார்கள். 'அவர்கள் போற்றுகின்ற கவியிடம் (நாமக்கல் கவியுடன்) உள்ள கட்சிக் கொள்கைகள் தெரியா. அந்தக் கவியுடன் போட்டியிடக் கூடிய புரட்சிக் கவியிடம் (பாரதிதாசன்) உள்ள, காலத்துக்கேற்ற கருத்துகள் கட்சிக் கொள்கைளாகத் தெரியும். உடனே, இந்தக் கவியைக் கட்சிக் கவி, கற்பனா சக்தியைக் குறிப்பிட்ட கொள்கைக்காகப் பாழ்படுத்திவிடுகிறவர், என்று பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தி விடுவார்கள். அறிவிழந்த மக்கள் அதை நம்பிக் கவிதைகளைக் கைவிடுவார்கள்.

காரணம் இல்லாமல் இல்லை

ஏன் புரட்சிக் கவியைப் புத்துலகச் சிற்பியாக மக்கள் முன் கொண்டு வந்து நிறுத்தவதில்லையென்றால், அவருடைய புதுமைக் கருத்துக்களைக் காணும்படி மக்களைத் தூண்டுவதில்லை யென்றால் காரணமில்லாமல் இல்லை. மக்கள் புரட்சிக் கவியின் உண்மை உருவத்தைப் பார்த்து விட்டால், அவர்களால் தூக்கி வைக்கப்பட்ட கவிகள் தொப்பென்று கீழே விழுந்து விடுவார்கள், கவிகளுக்கு மதிப்புக் குறையும்; போற்றினவர்கள் பிழைப்பும் கெடும். இளங்கோவைப் பற்றி மக்கள் அறிய ஆரம்பித்து விட்டால் சிலம்பு
நாட்டிலே ஒலிக்க ஆரம்பித்து விட்டால் கம்பனுக்கும் கம்ப ராமாயணத்துக்கும் அவ்வளவு மதிப்பும் இராது. மான்செஸ்டர், கிளாஸ்கோ முதலிய இடங்களிலிருந்து மெல்லிய துணிகள் வருகின்றன என்றால் லாங்கிளாத்துக்கு அவ்வளவு கிராக்கி இருக்காது என்பது மட்டுமல்ல; சேலம் ஆறு - ஏழு முழ வேட்டிகளுக்கும் மதிப்பு இருக்காது. ஆமதாபாத் புடவைகள் அமோகமாகக் கிடைக்கின்றன என்றால் ஆரணங்குகளும் பெங்களூர்ப் புடைவையை எப்படி விரும்புவர்? கம்பனைப் பற்றி நான் குறை கூறுவதாக நினைக்கக்கூடாது. உங்களிடமுள்ள குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும். ஒரு சிலரைப் போற்றுவதன் மூலம்தான் புகழடைய முடியும்; நமது புலமை மிளிரும் என்ற நினைப்பு மறைய வேண்டும்.

பாண்டியன் பரிசு

இந்த முறையில் பாரதிதாசனின் பாண்டியன் பரிசு குறையைப் போக்குவதாக இருக்கிறது. பாண்டியன் பரிசு சங்ககால இலக்கியங்களிலுள்ள உவமைகளையும், அணிகளையும், எளிய நடையில் எல்லோரும் புரிந்துகொள்ளுமாறு இயற்றப்பட்டிருப்பதைக் காணலாம். பாடலுக்கு லட்சணம் படித்தவுடன் இலேசில் புரிந்து கொள்ளக் கூடாது என்றும், புலமைக்கு லட்சணம் பிறர் கண்டு பயப்படவேண்டும் என்றும் கருதுகிறார்கள்.

பாரதிதாசனின் காவியத்தைப் பார்க்க, படித்து உணர இலக்கணம் தேவையில்லை; இலக்கியங்களைப் படித்திருக்க வேண்டுவதில்லை; நிகண்டு தேவையில்லை; பேராசிரியர்கள் உதவி தேவையில்லை. ஆனால் இதைப் புலவர் சிலர் வெறுக்கின்றனர்; மறுக்கின்றனர்! எளிய நடையினில் எழுதுவது ஓர் ஆற்றலா என்று தம்மால் எழுத முடியா விட்டாலும் ஏளனம் பண்ணுகின்றனர்!

புலவர்களுக்கே பழக்கம்

ஒருவர் எழுதின புத்தகத்திற்கு மறுப்போ அல்லது அதில் ஏதாவது குறையோ காணாவிட்டால், சில புலவர்களுக்குத் தூக்கமே வராது. திருவிளையாடல் புராணத்திற்கு விளக்கவுரை என்று திரு.வி.கலியாணசுந்தரனாரால் ஒரு புத்தகம் பிரசுரிக்கப்படும். அந்தப் புத்தகம் அச்சில் இருக்கின்ற அதே நேரத்தில், அதே அச்சுக்கூடத்திலேயே திரு.வி.க.வுக்குச் சில கேள்விகள் என்ற ஒரு துண்டுப் பிரசுரம் வெளியாகும். ஒருவர் போட்ட புத்தகத்திற்கு இன்னொருவர் மறுப்பு எழுதாவிட்டால் அவருக்கு நிம்மதி ஏற்படாது. காரணம் அவர்களிடம் மூலதனம் குறைவு. ஒருவர் எடுத்து ஆளவேண்டுமென்றிருந்த அணியை, இன்னொருவர் கையாண்டிருப்பார். ஆகவே, எழுதியதில் குற்றங்கள் கண்டுபிடித்து அவரது பிழைப்பையும் கெடுத்து விடவேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் மீதும் குற்றமில்லை. அவர்களிடம் எண்ணற்ற கருத்துகள் ஊறுவதில்லை. கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாக நானும் பார்க்கிறேன்; பாரதியார், சுந்தரம் பிள்ளையைத் தவிர மேல் நாடுகளில் உள்ளது போலக் கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகிறார்களா? அல்லது கலையைக் கடை வீதியில் கொண்டு வந்து நிறுத்துகிறார்களா? அவர்களது பாக்களிலே எழுச்சி இருக்கிறதா? அதனால் நாடு உயர்வடைய ஏதாவது மார்க்கமுண்டா? என்றால் இல்லை. காரணம், புலவர்களின் பிற்போக்கான நோக்கமே. நான் ஒரு புலவரைப் பார்த்து, 'தோழரே! அணு குண்டு கண்டுபிடித்தது

எவ்வளவு ஆச்சரியம்! அதன் அழிவு சக்தியைக் கேட்டீரா?' என்றால்,

''அது என்னப்பா பெரிது? ஆங்கிலேயனோ அமெரிக்கனோ தான் அழிவு சக்தியை ஏற்படுத்த, இந்த ஆயுதத்தைக் கையிலேந்த வேண்டும். நம் பரமசிவம் நெற்றிக் கண்ணைத் திறந்தால் போதும்; கண்ணிலிருந்து நெருப்பு ஜ்வாலைகள் பறக்கும்; எதிரிலே உள்ள அத்தனைப் பொருள்களும் சாம்பலாகி விடும் என்று பதில் சொல்லுவார். அது இருக்க இது ஏன் என்ற பிற்போக்கான நோக்கமும், சோம்பேறித்தனமும்தான் காரணம்.

## அது இருக்க இது ஏன்?

'அது இருக்க இது ஏன்' என்று மேல் நாடுகளிலே கருதி இருப்பார்களானால், ஆளில்லா விமானத்திற்குப் பிறகு அணுகுண்டு கண்டுபிடித்திருக்க முடியுமா? தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது, நமக்கு வேறேன்ன வேண்டும் என்றிருந்தால், அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதும் என்றிருந்தால், கலிங்கத்துப்பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப்பரணியே போதுமென்றிருந்தால் மனோன்மணீயம் தோன்றியிருக்க முடியுமா? மனோன்மணீயம் போதுமென் றிருந்தால், பாரதியாரின் தேசீய கீதங்களைக் கேட்டிருக்க முடியுமா? பாரதியாரின் தேசியகீதங்களே போதுமென்றிருந்தால், தேசிய விநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைத்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியாது. தேசியவிநாயகம் பிள்ளையே போது மென்றிருந்தால், நாமக்கல்லாரின் ''கத்தியின்றி ரத்த மின்றி'' என்ற புது மாதிரியான சண்டைத் தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா? அதுபோலத்தான் நாமக்கல்லாரே போதுமென்றிருந்தால் 'கொலைவாளினை எடடா! மிகு கொடியோர் செயலறவே' என்னும் பாரதிதாசனின் உணர்ச்சிமிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது.

## காலத்தின் சிருஷ்டி கர்த்தா

பாரதிதாசன், மேல்நாட்டுக் கவிகளைப் போல கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகிறார். காலத்தையே சிருஷ்டிருக்கிறார். காலத்தையே சிருஷ்டிருக்கிறார் என்பது மாத்திரமல்ல, காலத்தை மாற்றுகிறார். காலத்தை மாற்றுகிறார் என்பது மட்டுமல்ல. மாறிய காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார்; அது மாத்திரமல்ல; சமயம் கிடைத்தால் முன்னேயும் பிடித்துத் தள்ளுகிறார். தென்றல் வளரும்; நிலவு வளரும்;

செல்வம் வளரும். அவை போல அவரது கவிதைகளும் வளர வேண்டும்.

<u>பத்துப் பேர்</u>

ஆனால், அவை வளரக்கூடாது என்று ஒரு பத்துப் பேர்! அந்தப் பத்துப் பேருடைய பெயரையும் இது அரசியல் மேடையாயிருந்தால் குறிப்பிட்டிருப்பேன். இது அறிவு மேடையானதால் குறிப்பிடாமல் விடுகிறேன். கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லோரும், தங்களைத் தவிர வேறு யாரும் சங்க இலக்கியங்களை அறிய முடியாது; அப்படியே அறிந்தாலும் பொது மக்களின் ஆதரவிற்குத் தங்களைத் தவிர வேறு யாரும் அருகதை அற்றவர்கள் என்று கருதுகிறார்கள்.

<u>கையில் ஊமையர்</u>

ஒரு மாதத்திற்கு முன் சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையில், ஓர் உவமையைப் படித்தேன். இந்தக் காலத்தில் கற்பனை நிலை எவ்வளவு தூரம் கயமைத்தனத்திற்குப் போயிருக்கிறது என்பதை ஊகித்தேன். வித்தியாசத்தைப் பாருங்கள்! இந்தக் காலத்துப் புலவர்கள் எந்தக் கருத்தை ஓர் அந்தாதி மூலமாகவோ, வெண்பா மூலமாகவோ விளக்குவார்களோ, அதைக் குறுந்தொகை ஆசிரியர் ஒரே அடியில் கூறி விட்டார். அந்த அடிதான் 'கையில் ஊமன்' என்பதாகும்.

ஒரு தோழன் காதலிலே ஈடுபடுகிறான். உவமையின் நேர்த்தியைப் பாருங்கள்! கட்டுங்கடங்காத காளை; இருந்தாலும் கட்டுப்படுகிறான் இரு கண்களுக்கு. மனத்தில் ஏதோ நினைக்கிறான், அதை எதிரேயுள்ள கட்டழகியிடம் சொல்ல முடியவில்லை; எதைப்போல் என்றால் - காலை நேரம் காட்டிலே ஒரு பாறையிலே வெண்ணெய் இருக்கிறது; கையில் ஊமையன் இதற்குக் காவல். காலைக் கதிரவன் காலையில் எழுந்து தனது இளங்கதிர்களைப் பாய்ச்சுகிறான்.

வெண்ணெய் உருகிறது. வெண்ணெய் உருகுவதைப் பார்க்கிறான். பார்த்ததும் 'ஐயோ! வெண்ணெய் உருகுகிறதே' என்று கூறலாம். ஆனால் வாயில்லை. நேரே ஓடிப்போய் எல்லாம் உருகுவதற்குள் எடுக்கலாம்; ஆனால் கையில்லை. கதிரவன் இந்தக் கையில் ஊமையனின் கதியற்ற நிலையை அறியான். அவன் அவனது வேலையைச் செய்கிறான். அவன் பிரபஞ்சத்திற்கும் சொந்தம். காவலாளிக்குக் கையில்லை; வாய் ஊமையே தவிரக் கண் மாத்திரமிருக்கிறது. இந்தக் கோரக் காட்சியைக் காண.

அதைப்போலவே கண்மாத்திரம் இருக்கிறது. கட்டழகியைக் காண. ஆனால் சுயமரியாதை இல்லாததாலோ, சுதந்திர உணர்ச்சி இல்லாததாலோ கையில்லை. (கையில் துணிவில்லை) அவளது கரத்தைப்பிடிக்க. அந்த வடிவழகியைக் கண்டு ஏதோ பேச வேண்டுமென்று நினைக்கிறான். ஆனால் சமுதாயக் கட்டுப்பாடுகள் அவனது வாயை மூடி விட்டன; எவ்வளவு அருமையாக ஒருவன் ஒருத்தியைச் சமுதாயக் கட்டுப்பாடுகளால் தொடமுடியாமல் கஷ்டப்படுகிறான் என்பதை ஒரு சிறு அடியில் விளக்குகிறார். "கையிலூமன் வெண்ணெய் உருகாது கண்ணால் பாதுகாத்தாற் போன்று"என்று. சங்க இலக்கியங்களின் இன்பங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால், இன்று முழுவதுஞ் சொல்லிக் கொண்டிருக்கலாம். சங்க இலக்கிய நுட்பத்தை அனுபவிக்க வேண்டிய இடங்களை நமக்கு ஏற்ற எளிய முறையில் அளிப்பது என்றால் அந்தத் துறையில் பாரதிதாசன் நாட்டுக்கும் நமக்கும் செய்துள்ள தொண்டினை மறந்தாலும் மறக்கலாம்; ஆனால் மறைக்க முடியாது. பாரதிதாசன் தரும் இலக்கியச் சுவையை அனுபவிக்க இலக்கணம் கற்றிருக்கவேண்டியதில்லை.

பாரதிதாசன் பாக்களைப் படித்தவுடன் அவை நமது இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கின்றன; உணர்ச்சி, நரம்புகளிலே ஊறுகிறது; சுவைத்தால் ருசிக்கிறது. படிக்கிறோம்; பாரதிதாசன் ஆகிறோம். படிக்கிறோம்; நாமும் பாடலாமா என்று நினைக்கிறோம். படிக்கிறோம்; 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்கிறோம். ஆனால், சில புலவர்கள் அதிலே இலக்கண அமைப்பு இல்லை எனலாம். அஃது அவர்களது ஓய்வுநேர வேலையாக இருக்கட்டும். காரியத்திலே ஈடுபடுகிற நாம், ஓட்டைச் சட்டியாயிருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி என்று கருதுகிறோம். கவைக்குதவுமா, கற்க நிகண்டு தேவையில்லையே! பாட்டிலே ஏதாவது எளிமையுடன் இனிமை மாத்திரம் கலந்து விடாமல் எழுச்சியும் கலந்திருக்கிறதா, புரிகிறதா, புரிந்து பயனடையலாமா என்று பார்க்கிறோம். நாம்தான் பெரும்பான்மை, அவர்கள் குறைந்த எண்ணிக்கை என்று சொல்லி ஓரிடத்தில் கூறுவதுபோலப் பாட்டைப் படித்தவுடன் புரிந்து கொள்ளும்படியாக இருக்க வேண்டும் என்பவரின் எண்ணிக்கை தான் அதிகம். கடின நடைக் கவிதைகளை விரும்புபவர் எண்ணிக்கை கொஞ்சந்தான், அவர்கள் பாரதிதாசனின் பாக்கள் எந்தச் சின்னங்கள் மட்டமானவை என்று தேடித் திரிபவர்கள். நாம்தான் சுவையை அப்படியே அனுபவிப்பவர்கள். பயனடைகிறோம்; காரணம் எளிய இனிய நடை. இதுவரை அவரது நடையைப் பற்றிச் சொன்னேன். அவர் எடுத்துக் கொள்ளும் பொருள் என்றால், அவர் கொடுக்கும்

தலையங்கங்களென்றால், அவை புரட்சிகரமாயிருக்கும்; புதுமையாயிருக்கும்.

<u>இரண்டு நாக்குகள்</u>

ஒரு காலத்திலே, தமிழகத்திலே சாலைகளையும், சோலைகளையும் கண்டுகளித்துச் சந்தனக் காடுகளிலே, சந்தம் அமைத்துப் பண் பாடினார்கள். பிற்காலத்திலே, அதாவது இடைக்காலத்திலே, வாழ்வு இந்த லோகம் அந்த லோகமாகப் பிரிந்தது, பேரம்பலம் சிற்றம்பலம் என்பதுபோல. மாயவாழ்வு மனித வாழ்வு என்று ஏற்பட்டது. இடைக்காலப் புலவர்களின் உள்ளங்களிலே ஒரே நேரத்தில் இரண்டு மாறுபட்ட காட்சிகள் தோன்றி மறைந்தன. ஒரே உதட்டில் இரண்டு நாக்குகள் புரண்டன. குன்றைப் பற்றிப் பாடுகின்ற நேரத்திலே அந்த லோகம், அந்த வாழ்வு என்ற எண்ணங்கள் தோன்ற, அந்தக் குன்று முருகனுடைய தோளாகவும், அதுவும் வள்ளியிடம் கொஞ்சிய தோளாகவும் காட்சியளித்ததே தவிர. மலைச்சாரலிலே வளைந்து ஓடும் ஆறு; கரடுமுரடான பாதை; அவற்றைத் தாண்டி மலை மீதிருந்து கீழே பார்த்தால் காடு தெரியும் காட்சி; காடுகளில் சிறுத்தையும், புலியும் உலவும் காட்சி; அங்கு வேடுவரும் வில்லியரும் ஆடுகிற வேட்டை, ஆகிய இயற்கை எழில், அந்த விநாடி தோன்றவில்லை.

<u>கற்பனைக் கொலை</u>

இன்று நாடக மேடைகளில் நடக்கிற வள்ளித் திருமணத்திற்கும். திலிருந்துதான் இது கற்பனையானதோ என்று எண்ணும்படியான ஓர் இயற்கை நிகழ்ச்சி சங்க இலக்கியத்தில் வர்ணிக்கப்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். பண்டைக் காலப் புலவர்களின் கள்ளங் கபடமற்ற உள்ளத்தையும், இடைக்காலத்திலே இரட்டை வாழ்க்கையினிடையே புராண மெத்தையில் புரண்ட புலவர்களின் உள்ளத்தையும், இந்தச் சிறு படப் பிடிப்புத் தெளிவாக்கும் என நம்புகிறேன். ஒரு தலைமகன் காட்டுக்கு வேட்டையாடச் செல்கிறான். தன் வேல் தைத்த யானை எப்பக்கம் ஓடிவிட்டது என்று தேடிக் கொண்டு வந்தவன் முன் ஓர் ஆரணங்கு எதிர்ப்படுகிறாள். நல்ல அழகி; பக்கத்திலேயே பளிங்கு நீரோடை. கட்டழகன் அந்த மங்கையை மணந்து கொள்ள இச்சைப் படுகிறான். மணந்து கொள்வதென்றால் இந்தக் காலத்தைப் போலப் பொருத்தம் பார்க்க ஐயரைத் தேடுவது தேவையில்லாதிருந்த காலம் அது. காதலர் இருவரும் கண்களால் பேசினார்கள். வாய் அச்சுப் பதுமை போலிருந்த போதிலும் அருகே சென்றான். வஞ்சி அஞ்சினாள். அஞ்சாதே அஞ்சுகமே என்றான்.

ஆனால், சற்று நேரத்தில் ஓர் அலறல் கேட்கிறது. அது என்னவென்று கேட்கிறாள், அந்த ஏந்திழையாள். அது என் வேல் வலிக்குத் தாங்க முடியாமல் பிளிரும் யானையின் குரல் என்கிறான். பாவைக்கு யானை என்றால் பயம் போலிருக்கிறது; 'ஐயோ யானையா! அச்சமாயிருக்கிற' தென்றாள். 'அச்சமானால் அருகே வா', என்றான்; வந்தாள். அணைத்துக் கொண்டான். திருமணம் முற்றிற்று!!

இந்த ஒரு சம்பவத்தைப் பிற்காலத்தில் வள்ளி கதையாக்கி, அந்த வீரனை வேலனாக்கி, கிழவனாக்கி, தேனும் தினைமாவும் கேட்டான் என்று சொல்லி, வளையற்காரனாக்கி விட்டார்கள். வைதீகத்தைப் புகுத்தி, மூடநம்பிக்கையை வளர்க்கும் பகுத்தறிவிற் கொவ்வாத ஏடுகள் இருக்குமானால் அவை குற்றம் என்று கருதப்பட்ட காலம். இதனால் அந்தக்காலத்திற்குத் தகுந்தாற்போல், அப்போது கவிதைகள் எழுந்தன. இடைக் காலத்திற்குத் தகுந்தாற்போல், இன்றைய வள்ளிகதை போன்றவை இயற்றப்பட்டன. இப்படி காலத்திற் கேற்றவாறு தான் கவிதைகள் இயற்றியிருக்கிறார்கள் என்றால் காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து கொள்ளாதவன் சிறந்த கவியாக மாட்டான். அவன் கோர்ட்களில் உள்ளவர்களைப்போல, ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து வைக்கும் ரிகார்டு பேர்வழி. அவன் அழகாக நெல்மணிகளைச் சேகரித்து மிராசுதாருக்குக் கொடுக்கும் பண்ணையாள். அவன் சிறந்த கவி யாகமாட்டான். சிருஷ்டி கர்த்தா வாகமாட்டான். எக்காலத்திலும் ஜீவித்திருக்கும் உயிர்க்கவி யாகமாட்டான்.

<u>காலமெனும் சிறை</u>

இடைக்காலக் கவிகளும் அதற்குப் பின்னால் ஏற்பட்ட அநேக கவிகளும் காலமெனும் சிறையிலே தங்களைத் தாங்களே ஒப்படைத்து விட்டார்கள். அவர்கள் அதினின்றும் வர முயன்றால், அதைச் சுற்றி உள்ள மதமெனும் மண்டபச் சுவரை ஏறிக் குதிக்க வேண்டும். ஆதலால்தான் அந்தக் கவிகளுக்கு ஆண்டவனின் அவதார லீலைகளைப் பற்றியும், கயிலைக்கும் திருப்பதிக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், தேவாதி தேவர்களைப் பற்றியும் தேவாதி தேவன் கௌதமர் ஆசிரமத்திலே செய்த ஆபாசத்தைப் பற்றியும் எழுத எண்ணம் பிறந்ததே ஒழியக் காடுகளைப் பற்றியோ, மாடுகளைப் பற்றியோ,மலைகளைப் பற்றியோ, கவிதை செய்யவில்லை. செய்யவில்லையா? அடாது! காலைக் கதிரவனைப் பற்றியும் மாலை மதியத்தைப் பற்றியும் பாட்டுக்களில்லையா? இதோ பார் என்று

சொல்லலாம்; இருக்கின்றன. ஆனால் வைதிகமெனும் குறுக்குச் சங்கிலியுடனே பிணைக்கப்பட்டிருக்கின்றன. கவிதா ரசத்துடனேயே அவை கல்லூரி மாணவர்களின் நெஞ்சில் நஞ்சைப் பாய்ச்சுகின்றன.

அதனால்தான் நமது புரட்சிக்கவி அந்த இரண்டையும் வெட்டு என்கிறார்; கூரில்லாத வாளைக் கூராக்கு என்கிறார். படி இல்லாத குளத்திற்குப் படி கட்டு என்கிறார். குன்று இல்லாத இடத்திலே செய்குன்றாவது செய் என்கிறார். குள்ள உள்ளத்தைக் கொலை செய் என்கிறார். கூனாதே நிமிர்ந்து நட என்கிறார். மேகத்திலிருந்துநிலவொளி வெளியே வரட்டும் என்கிறார். அந்த லோகத்தைப் பற்றிப் பாடாதே; இந்த லோகத்தைப் பற்றிப் பாடு என்கிறார். நாம் வாழும் இந்த இடத்தைப் பாடு என்கிறார். காலத்துக்கு அடிமையாகாதே என்கிறார்; இலக்கணக் கட்டுப்பாட்டுக்குப் பயப்படாமல் பாடு என்கிறார். அதனால்தான் அவரைப் "புரட்சிக் கவி" என்று அழைக்கிறோம்; உயிர்க்கவி உண்மைக்கவி என அழைக்கிறோம்.

<u>புரட்சிப் புதுவை</u>

புரட்சிக்கவி என்றுதான் அழைக்கிறோமேயன்றிப் புரட்சியில் முதற்கவி என்றழைக்கவில்லை. அவர் இந்த லோகத்தைப் பற்றி இவ்வளவு புரட்சிகரமாகப் பாடுவதற்குக் காரணம் அவர் வாழும் புதுவை ஆகும். புதுவையானது பிரான்சு நாட்டைச் சேர்ந்தது. பிரான்சு சுதந்திரத்தின் பிறப்பிடம். நாம் எல்லாம் ராஜாதி ராஜாக்களைப் போற்றிய நேரத்தில், அங்கு அரசர்களைச் சிறையில் அடைத்த காலம். அரண்மனைகளை ஆசிரமங்களாக அநியாயக் கோட்டைகளாக ஆக்கிய நேரத்திலெல்லாம் அங்கு பாஸ்டிலி உடைக்கப்பட்ட நேரம். ஆண்டான் அடிமை என்ற வார்த்தைகள் இங்கு உலவிய நேரத்திலெல்லாம் அங்கு சுதந்திரம். விடுதலை, என்ற கோஷங்கள் வானைக் கிழித்த நேரம். அந்தப் பிரான்சின் சாயல் அந்த பிரான்சின் தென்றல் அவர் வசிக்கும் புதுவையில் வீசுவதால்தான் அவர் கொடுக்கும் தலைப்புகள் புரட்சிகரமானவையாகப் புத்துலகக் கருத்துக்களைத் கொண்டிலங்குவனவாக இருக்கின்றன.

<u>யாருக்குத் தெரியும்?</u>

பல கவிகளுக்கு, அவர்கள் பாடுகிற பாட்டுக்களைப் பற்றி அவர்களுக்கே தெரியாது. ஆனைமுகனைப் பற்றி அழகாகப் பாடுவார்கள்; துதிக்கையைப் பார்த்ததுண்டா? அதன் அகல நீளமென்னவென்றால் தெரியாது. ஊர்வசியும், ரம்பையும் சிறந்த

நாட்டியக்காரிகள்; அவர்களிருப்பது தெய்வலோகம் என்றால், கேள்வி ஞானமே தவிர அனுபவமேது? பத்துத் தலை இராவணணைப் பற்றிப் பாடுகிறார்களெனன்றால், இராவணனைப் பார்த்ததேது? பரமசிவன் பார்வதியுடன் ரிஷபவாகன ரூபராய்த் திடீர் திடீரெனத் தோன்றி மறைகிறார் என்றால், என்றாவது கண்டதுண்டா? படித்ததை எழுதுகிறார். கேட்டதை ஒப்புவிக்கிறார். அதாவது ஒருவர் கேள்விப்பட்டு எழுதுவார்; சொல்லுவார். சொன்னதைக் கேட்டவர் அதையே எழுதுவார்; இது பரம்பரை என்பதே தவிர கண்டதை, பார்ப்பதை அனுபவபூர்வமாக எழுதுகிறார்கள் என்பதற்கில்லை.

<u>சிந்தனை சொல்லிற்று</u>

பாரதிதாசன் மாத்திரம்தான், தாம் கண்டதை எழுதுகிறார்; பார்த்ததை எழுதுகிறார், புரியாத விஷயங்கள் தெரியாத விஷயங்கள் வழிக்கே போகமாட்டார்; காணாத கடவுளைப் பற்றி எழுதமாட்டார்; இன்று இல்லாவிட்டாலும் நாளை பரிகாசத்திற்கு இடமாகும் என்று, நான் வேதாந்தத்தைப் பற்றிப் பேசினால் வேடிக்கையாய் இருக்கும். சங்கராச்சாரி பொருளாதாரத்தைப் பற்றிப் பேசினால் வேடிக்கையாயிருக்கும். மானையும் மடந்தையையும் பற்றிப் பாடவேண்டிய புலவர்கள், ஆறுமுகத்தைப் பற்றியும் ஆறுமுகத்தில் எந்த முகம் வள்ளிக்கு முத்தம் கொடுத்த சொந்த முகம் என்பதைப் பற்றியும், பரமசிவத்தின் வேலாயுதத்தைப் பற்றியும் அந்த வேல் மொட்டையாயிருந்தால், மேருமலையின் எந்தப்பாகம் தீட்ட உபயோகப்படும் என்பதைப் பற்றியும், பாடினால் வேடிக்கையாயிருக்கும் என்பது மட்டுமல்ல; ஏதோ ஒரு புலவர் தம் விருப்பம்போல் கதையளக்கிறார் என்றுதானே நினைக்க நேரிடும்! பண்டிதர்களின் பரம்பரையிலே, பாரதிதாசனும் கொஞ்ச நாள் இருந்தார். கவிபாடினார், மற்றவர்களைப் போல, மயிலையும் முருகனையும் பற்றிப் பாட்டுகள் பாடினார். வள்ளியைப் பற்றிலாலிகள் பாடினார். அவரது பாக்களும் வெள்ளிக்கிழமை விளக்கு ஏற்றி வைத்த நேரத்தில், மஞ்சள் பெட்டியில் வைத்துப் பூசிக்கப்பட்டன. இதைப் பார்த்தார் நம் கவிஞர். நாம் இவ்வளவு நாட்கள் புளுகிவிட்டோமே; எவ்வளவு மக்களை மருளுக்கு அழைத்துச் சென்றிருக்கிறோம்; அவர்களுக்கு உண்மையை உரைக்கவில்லையே; நாம் அகப்பட்டுக் கொண்டோமோ; நெற்றிக்கண் பரமசிவத்தைப் பாடிவிட்டு, பிறகு ஓர் பகுத்தறிவுவாதி, ‘ நீ பரமசிவத்தைப் பார்த்தாயா?‘ என்று கேட்டால், என்ன சொல்வது என்று சிந்தித்தார். அந்தச் சிந்தனை அவருக்குச் சொன்னது, "உனக்குக் கவிதை

பாடக் கயிலாயம் தானா தேவை? கடவுள் தானா வேண்டும்? சுனையைப் பற்றிப் பாடு; பறவையைப் பற்றிப் பாடு: தென்றலைப் பற்றிப் பாடு; நீலவானைப் பற்றிப் பாடு; கோலவிழியைப் பற்றிப் பாடு; முழுநிலவைப் பற்றிப் பாடு; கூர்வாளைப் பற்றிப் பாடு; வீரனின் தோளைப் பற்றிப் பாடு; வட்டத் தாமரையைப் பற்றிப் பாடு; அவை உன் பேனா முனையின் கட்டளைக்குக்
காத்துக்கிடக்கின்றன" என்று இதை 'ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட என்னும் அவரது கவிதையிலே பார்க்கலாம். அது அவரது கவிதை மட்டுமல்ல; அவரது சுய சரித்திரமுமாகும்.

<u>அவர் செய்தது</u>

நம்பத் தகாதவற்றை நம்புவதா? நம்பும்படி நாட்டு மக்களை நிர்ப்பந்திப்பதா? இதைவிட நயவஞ்சகச் செயல் வேறொன்றுமில்லை. அந்த லோகமே வேண்டாமென்று இந்த லோகத்துக்கு வந்தார். வந்து கடவுள் முதற் கொண்டு கர்ப்பத் தடை வரைக்கும், காதலிலிருந்து விதவை மறுமணம் வரைக்கும், சுண்ணாம்பு இடிக்கிற பெண்ணின் பாட்டிலிருந்து ஆலைச்சங்கின் நாதம் வரைக்கும், அன்றாட வாழ்க்கைக்கு அவசியமானதை, கண்டுகளிப்பதை, நாம் பாடவேண்டுமென்றிருந்ததைப் பாடினார். பாடுகிறார். நாம் பார்ப்போம்!

இந்தக் கட்டழகியின் கண்ணீருக்காவது ஒரு பாட்டுப் பாட வேண்டும் என்று நினைப்போம். ஆனால் பாட முடியாது, அதைப் பாரதிதாசன் பாடுவார். நமது வேலையை அவர் செய்து தருகிறார். நாம் விதவைகளைப் பார்க்கிறோம், அவர்கள் பூவணியாத கோலத்தைப் பார்க்கிறோம்; அவர்கள் கன்னத்தில் வழிந்து காய்ந்துபோன நீரைப்பார்க்கிறோம். தேம்புதலைக் கேட்கிறோம். மமதையாளர் அவர்களுக்கு மணவாளர்களும் தேவையா என்று சொல்லுவதைக் கேட்கிறோம். அவர்களோ மாளவேண்டிய வயதில் காமரசம் பருகுவதற்காகக் கன்னிகைகளைத் தேடுவதைப் பார்க்கிறோம்; தாத்தாவுக்கு வாழ்க்கைப் பட்டபெண் தாழ்வாரத்திலே தனியே புரள்வதைப் பார்க்கிறோம்; அவளது கண்ணீர் தலையணையை நனைத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்;
பார்த்துக் கருத்தை வெளியிடக் கவிதைகள் கட்டலாமா என்று நினைக்கிறோம். ஆனால், முடியவில்லை. கவிஞர் பாரதிதாசன் அதைக் கவிதையால் பாடுகிறார். பாடி. 'இதைத்தானே தம்பி நீ பாட

வேண்டுமென்று நினைத்தாய்?‘ என்று காட்டுகிறார். நாம் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அவர் கவிதைகளிலே அந்த லோகத்தைப் பற்றியோ, அந்த வாழ்வைப் பற்றியோ இருக்காது.

காதற்ற ஊசி

பட்டினத்தடிகள் காலத்திலிருந்துதான் மாய வாழ்க்கை பற்றி மக்கள் அதிகம் நினைக்க ஆரம்பித்தனர். ‘காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே‘ என்ற மாயா வாழ்க்கைத் தத்துவம் இன்றும் உலவுகிறது. நாடகங்களிலே நீங்கள் இதைப் பார்த்திருக்கலாம். அங்கிருந்து அரசன் வருவான். அரசனைப் பார்த்து ஒருவன் கேட்பான், ‘இந்த அரண்மனை யாருக்குச் சொந்தம்; இந்த நந்தவனம் யாருக்குச் சொந்தம்? இரும்புப் பெட்டி யாருக்குச் சொந்தம்? இரும்புப் பெட்டியிலுள்ள 20 லட்சம் யாருக்குச் சொந்தம்? என்று. அரசன், ‘யாருக்கும் சொந்தமல்ல‘ என்று சொல்லுவான். உண்மையிலே அவன் இறந்த பிறகு அவன் மகன் அனுபவிப்பான்; மகன் இல்லாவிட்டால் அவனது மருமகன் அனுபவிப்பான்; மருமகன் இல்லாவிட்டால் அவனது வாரிசுகளில் ஒருவன் அனுபவிப்பான். வாரிசுமில்லா விட்டால் தர்மகர்த்தாக்கள் அனுபவிப்பார்கள். தர்மகர்த்தாக்கள் இல்லாவிட்டால், நிரந்தர தர்ம கர்த்தாவாகிய நமது சர்க்கார் அனுபவிப்பார்கள். இதை மக்கள் உணருவதில்லை. உணர அவர்கள் மனம் இடம் கொடுக்காது. அந்த ‘மாயம்' எந்த மயக்கத்தை மக்களிடம் உண்டாக்கிற்று என்றால் நாற்பது வயது ஆளைப் பார்த்து ‘என்ன சௌக்கியமாயிருக்கிறீர்களா?' என்றால், சௌக்கியமா யிருக்கிறேன் இல்லை; என்று மேல் ஸ்தாயி இறங்கி கீழ் ஸ்தாயியிலே சொல்லுவான். அப்படிச் சொல்வதிலே சுரங் குறைந்திருக்குமென்பதோடு மட்டுமல்ல; பேச்சுடன் பெருமூச்சும் கலந்து வரும். அந்தக் கலப்புக் கேட்டவனுக்கே பயமும் கவலையும் உண்டாக்கி விடும்.

நல்லாயிருக்கிறேன் என்று சொன்னால் என்ன? மேல் நாடுகளிலே ஆங்கிலத்தில் ஹௌ டு யு டு என்றால், உடனே ஓ,கே, (நன்றாயிருக்கிறேன்) என்று சொல்லுவார்கள். அதனால்தான் அவர்கள் வாழ்கிறார்கள். நாம் ஏதோ இருக்கிறோம். பத்து வயதிலே பரதேசியாகி, பரலோகத்தைப்பற்றி. மாயத்தைப்பற்றி ‘காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா' என்று பாடுகிறோம். இந்த வாழ்வு, எத்தனை நாளைக்கு சார்? எல்லாம் மாயவாழ்வு; இது சதம் என்றா கருதுகிறீர்கள் என்று உண்மையிலேயே, தெரிந்தோ தெரியாமலோ எண்ணுகிறவர்கள் ஏட்டிலே தீட்டுகிறவர்கள் நம்மவரில் அநேகம் பேர்

இருக்கின்றனர்.

அழைத்தால்

‘சிவனே. அப்பா உனது பாதாரவிந்தம் எப்போது கிடைக்கும்?' என்று சிலைக்கு முன் கதறுகிற ஒரு சைவரிடம் ஒரு வேளை பரமசிவன் போல் யாராவது முன்னால் வந்து ‘பக்தா! பயப்படாதே; எழுந்திரு. உனது சிவநேசத்தைக் கண்டு உள்ளம் பூரித்தேன். இன்று முதல் நீ என்னுடன் இரண்டறக் கலந்து கொள்ளலாம் வா!‘ என்று அழைத்தால் போவதற்கு அவர் தயாராயிருப்பாரா? கேட்கிறேன், என்ன சொல்லுவார் அப்போது? ‘பிரபோ! தாங்கள் காட்சியளித்தது போதும்‘ என்பார். அப்பொழுதுதான் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் தன் மகன், பி.எல். முதல் வகுப்பிலே பாசாக வேண்டாமா, என நினைப்பார். தன் ஒரே மகளுக்கு நல்ல இடத்தில் மணம் முடித்து வைக்க வேண்டுமே என்று நினைப்பார்; போன வருடம் பாங்கிலே போட்ட 9 ஆயிரம் ரூபாய் எப்போது 10 ஆயிரமாக ஆகும் என்று எண்ணுவார், ஈசனைப் பற்றிய எண்ணம் தோன்றாது. உண்மையில் அவர்கள் பக்தியில் அர்த்தமிருக்கிறதா? மாய வாழ்விலே பேச்சில் நிஜம் இருக்குமா என்றால் இல்லை. இவையெல்லாம் மக்களை மயக்கி. அவர்கள் உழைப்பிலே வாழ்வதற்காக நயவஞ்சர்களால் வகுக்கப்பட்ட சூழ்ச்சியான வழிகள். மக்கள் இதை நம்பி இந்த வழியிலே போய்த் தடுமாறுகிறார்கள்.

புரட்சி மனப்பான்மையைத் தீய்த்தவை விழுப்புரம் ஜங்ஷனிலிருந்து கொண்டு பாண்டிக்குப் போகிறவன் வழி பார்ப்பது போலவும்; திருச்சி ஜங்ஷனிலுள்ளவன் மதராசுக்குப் போவதற்கு விளிப்பது போலவும், மக்கள் பிறந்தவுடனே அண்ணாந்து மேலே பார்த்துக் கொண்டு, ‘அப்பா! இதைவிட்டு எப்போது அந்த லோகத்திற்கு வருவேன்?‘ என்று, இந்த லோகத்தை ஒரு ஜங்கஷனாக்கி விட்டார்கள். சமணர்கள் காலத்தில் நிலையாமைத் தத்துவம் கொஞ்சம் வளர ஆரம்பித்தது. மணிமேகலையில் ஓர் இடத்தில் யாக்கை நிலையாமை பற்றி ஆசிரியர், சுதமதியின் வாயின் மூலம் கூறியிருக்கிறார். சுதமதி. மணிமேகலையின் தோழி. மலர்வனத்திலே மணிமேகலையைக் கண்ட அரசகுமாரன் (உதய குமாரன்) மானே! மயிலே! மரகதமே! என்று கூறுகின்றான். கூறிக் கொண்டே அருகில் வருகிறான். அப்போது சுதமதி கூறுகிறாள்.

"வினையில் வந்தது; வினைக்கு விளைவாரவது
புனைவன நீங்கிற் புலால்புறத் பறந்திடுவது;
முப்புவிளி வுடையது; தீப்பிணி யிருக்கை;

பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம் -
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து,"
(மணிமேகலை)

"மானே என்கிறீரே. அங்கே என்ன இருக்கின்றது? தோல், தோலைப் பிய்த்தால் இரத்தம், சீழ்; இவற்றிலா காமரசம் பருகலாமென்று வந்தீர்?" என்று யாக்கை நிலையாமையைப் பற்றிக் கூறுகிறாள். காமவேகத்தை அடக்குவதற்காகச் சுதமதி அரசகுமாரனிடம் யாக்கை நிலையாமையைப் பற்றிக் கூறினதுபோல, மக்களின் மனோவேகத்தை, அடக்க, மாயா வாழ்வைப் புகுத்தினார்கள் சில நயவஞ்சகர்கள்; எத்தர்கள் நல்லவர்களைப் போல நடித்தார்கள், ஏமாளிகள் இந்த லோகத்தில் கஷ்டப்படாமல், அந்த லோகத்தில் சுகம் கிடைக்கும்; இந்த லோகத்தில் நடக்கிற அநியாயங்களுக்கு, அந்த லோகத்தில் நீதி கிடைக்கும் என்றெண்ணி, எவ்வளவோ கொடுமைகளை எவர் இழைத்தாலும் அது எம்பெருமான் இட்ட கட்டளை என்று சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அனுபவித்தார்கள். அனுபவிக்கிறார்கள். மாயா வாழ்வு, விதி, அந்த லோகம் என்பவையெல்லாம் புரட்சி மனப்பான்மையைத் தீய்த்து விட்டன.

வேறு நாடாயிருந்தால்**?**

இல்லாவிட்டால், 150 ஆண்டுகளாக இவ்வளவு பெரிய நாடு, பரந்ததொரு விஸ்தீரணத்தைக் கொண்ட நாடு, பலப்பல புராணப் பெருமக்களைக் கொண்ட நாடு அந்நியனுடைய ஆட்சியிலே இருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அல்லது பார்த்திருக்கிறீர்களா? மேல்நாடுகளில் 25 ஆண்டுகளுக்கு ஒரு தடவை புரட்சி என்று படிப்போம். கலையிலே புரட்சி; மதத்திலே புரட்சி; நடையுடை பாவனையிலே புரட்சி, பொருளாதாரத்தில் புரட்சி; எல்லாவற்றிலும் புரட்சி என்று படிப்போம். இங்கு ஏதாவது உண்டா என்றால் இல்லை (இன்று இல்லாவிட்டால் நாளையாவது ஏற்படுமா?)

வங்கத்திலே பஞ்சம் ஏற்பட்டது. பட்டினியால் பல லட்சம் பேர் பிணமாயினர். அந்தப் பிணத்தை நாயும், நரியும் இழுத்தன என்ற இந்தக் காட்சி, என்ற இந்த நிலை மேல்நாடுகளிலே, வேறு நாடுகளிலே, மட்டும் ஏற்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்; அப்பொழுதே புரட்சி நடந்திருக்கும். ஆனால் துர்ப்பாக்கியமான இந்நாட்டிலே அது கிடையாது; ஏன் ஏற்படவில்லை? ஆங்கிலேயனுடைய

ஆயுதங்களுக்கஞ்சியா? இல்லை. புரட்சி மனப்பான்மையையே நமது கவிதைகளும், காவியங்களும் அடக்கிவிடுகின்றன; ஆதலால்தான்.

**<u>இருந்தால் என்ன? இறந்தால் என்ன?</u>**

அதனால்தான் நமது கவி பாரதிதாசன் இந்த லோகத்தைப் பற்றிப் பாடுகிறார். இந்த லோகத்தில் நீ பிறந்தது வாழ; வாழ என்றால் நிம்மதியுடன் வாழ; பிறரைச் சுரண்டாமல் வாழ; பிறரை வஞ்சித்தால்தான் வாழலாம் என்ற எண்ணமில்லாமல் வாழ; சுதந்திரமாய் வாழ என்கிறார். உருதிலே சிறந்த கவியான இக்பால் என்பவர் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது, அச்சமற்ற வாழ்க்கை தேவை என்றார். அச்சமற்ற வாழ்க்கை என்றால் அந்நியருக்கு அச்சமற்ற வாழ்க்கை; அறியாமைக்கு அச்சமற்ற வாழ்க்கை; சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு அச்சமற்ற வாழ்க்கை, அந்த அச்சமற்ற வாழ்க்கையைத்தான் தமிழன் நடத்தவேண்டும். அதற்கு இடையூறாக எந்தக் கட்டுப்பாடுகள் வந்தபோதிலும், தூள்தூளாக்க வேண்டும் இதைத் 'தாயின் மேலாணை, தமிழக மேலாணை, தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே நான் தோழரே உரைக்கிறேன்' என்று அவர் பாட்டில் கூறுகிறார். அவர் கவிதைகளிலே இந்த லோகத்தைப் பற்றி, இந்த வாழ்வைப் பற்றி; வாழ்கின்ற முறையைப் பற்றிதான் இருக்கும். இதுதான் தேவை.

அவன் ஏன் ஏழை? பூர்வஜென்மத்தில் செய்த பாவம். அவன் ஏன் பணக்காரனாயிருக்கிறான்? அவன் செய்த புண்ணியம். அவன் ஏன் தூங்காமலும் வேலை செய்து கொண்டேயிருக்கிறான்; இவன் ஏன் கவலையில்லாமல் தூங்குகிறான்? அவாளவாள் பூர்வ ஜென்ம பலன், தாழ்ந்த ஜாதி என்ற ஒன்று ஏன் இருக்க வேண்டும்? உயர்ந்த ஜாதி இருக்கிறபொழுது தாழ்ந்த ஜாதி இருந்து தானே ஆகும் என்ற வேதாந்தங்களையும்-பிறந்தோம்; பரமன் இட்ட கட்டளையை அனுபவித்துத்தானே தீர வேண்டும் என்ற கோழை உள்ளங்களையுமே வளர்ப்பவை எந்த உருவத்தில் இருந்தால் என்ன? அந்தாதியாயிருந்தாலென்ன? அகவலா யிருந்தால் என்ன? இவை இருந்தால் என்ன? இறந்தால் என்ன? பிற்காலத்திற்குத் தேவையில்லை. தேவையில்லை என்று சொல்லுபவர்களைக் கலையின் விரோதிகள், கலை நிலை உணரா மக்கள் என்றும், தங்களையும் ஆதரிக்க ஒரு பத்து பேர் இருக்கிறார்கள் என்ற துணிச்சலால் சிலர் சிந்தனையின்றி நிந்திக்கலாம். ஆனால், அவர்களெல்லாரும் வருங்கால மக்களின் கண்டனத்துக்குரியவர்கள்.

ஏன் சொல்லுகிறேன்?

மீனாட்சி சுந்தரனார்களும், சிதம்பரநாதர்களும், புத்தம் புதுக் கவிதைகளை, காவியங்களை இயற்றித்தரத்தானே இருக்கிறார்கள்? சேரன் செங்குட்டுவனின் வீரத்தைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுங்கள் என்று மீனாட்சி சுந்தரனைக் கேளுங்கள்; ‘ஏன் வீரம் சேரன் செங்குட்டுவனில்தான் இருக்கிறதா? கம்பராமாயணத்திலே வீரம் செறிந்திருக்கிறதே? என்பார்கள், நான் மீனாட்சி சுந்தரனாரைப் பற்றி ஏதோ தவறாகக் கூறுகின்றேன் என்று நினைக்க வேண்டா. இராமனுடைய வீரம் தமிழனுடைய வீரத்திற்க்கு நல்ல எடுத்துக்காட்டல்ல. தமிழனுடைய வீரத்திற்குத் தக்க சான்று உள்ளதைப் பாடுங்கள் என்கிறோம். புதிய கவிதைகளைப் பாடுங்கள் என்கிறோம். எங்கள் ஊனக் கண்ணுக்கு தெரியும் பொருளைப்-பற்றிப் பாடுங்கள் என்கிறோம்.

சாதாரண மக்களின் சதையையும், பிய்க்கும்படியான கவிதைகளையும் பாடுங்கள் என்கிறோம். தாயின் தன்மை ததும்பும்படி பாடுங்கள் என்கிறோம். தேயிலைத் தோட்டத்திலே நமது இளம் பெண்கள் படுகிற கஷ்டத்தைப் பற்றி பாடுங்கள் என்கிறோம். பாட்டாளி கொடிய பணக்காரனுக்கு அடிமை; பணக்காரன் பூசாரிக்கு அடிமை; பூசாரி ஏட்டுக் கடிமை; ஏடு கலைக்கு அடிமை; கலை கலா ரசிகர்களுக்கு அடிமை; கலாரசிகர்கள் பழமைக்கடிமை என்ற அடிமைத்தனம் அறுபடும் மார்க்கத்தைப் பற்றிப் பாடுங்கள்
என்கிறோம்.

<u>குட்டிப் பாரதிதாசன்</u>

நாமக்கல் கவிஞரின் மகனார், "தியாகி"யில் தீட்டிய ஒரு கவிதையைப் பார்த்தேன். நாமக்கல் கவிஞர் வீட்டிலே ஒரு குட்டிப் பாரதிதாசன் வளர்கிறார், மணியடிக்கிறதாம், பள்ளிக்கூடம் விட்டு வீடுவருகிறார். வழியிலே சாலைக்குப் பக்கத்தில் எச்சிலை வீழ்கிறது. சில நாய்கள் பாய்கின்றன. அந்த நாய்களுடன் இவர் கண்களும் பாய்கின்றன. ஆனால் ஆச்சரியப்படவில்லை. அடுத்தவிநாடி ஒரு வற்றிய மனித உருவம் வருகிறது. எச்சிலைகளின்மேல் பாய்கிறது. பாய்ந்து நாயைக் கல்லால்கூட அடிக்க வலுவில்லாமல் கையால் பிடித்துத் தள்ளுகிறது. தள்ளிவிட்டு, அந்த எச்சிலை உண்கிறது. நாய் சும்மா போக வில்லை. ஒரு கடி கடித்துவிட்டுப் போகிறது. இதைக் காணத் தம்பிக்கு ஆச்சரியம் மட்டுமல்ல, வேதனையும் பிறக்கிறது. தம்பி இந்தக் காட்சியை இன்னும் காணும்படியான இந்த நிலையிலே உள்ள, 'ஏ! பாரத நாடே' என்கிறார்.

கவிதை முடிகிறது. முடிக்கிறார் என்றால், எல்லோரையும் போல, "ஈசனே சிவகாமி நேசனே" என்று முடிக்கவில்லை 'என் நாடே' என்று கவிதையை முடிக்கிறார். இன்று கவிதைகள் அப்படிப்பட்ட முறையிலே வெளிவர வேண்டும் என்கிறோம்.

முத்திரை மோதிரம்

பாரதிதாசன் பாக்கள் அத்தகையன; அதனால்தான் அவர் பாக்களை மாணவர்கள் போற்றுகின்றனர். அவரைச் சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். அவர் காரசாரமாகச் சாதியைச் சமயத்தைக் கண்டிக்கிறார் என்பதற்காக. பாரதிதாசன் வர்ணாஸ்ரமத்தைக் கண்டிக்கிறார். கண்டிக்கலாமா? சனாதனத்தைச் சாடலாமா? வகுப்பு வாதத்தை வளர்க்கலாமா என்று கேட்கின்றனர். வகுப்பு வாதத்தை அவர் வளர்க்கிறார் என்றால், வகுப்பு வாதம் இந்த நாட்டை விட்டுப் போகத்தான் - விட்டு விலகத்தான் பாரதிதாசன் பாடுகிறார். கவிதைகளைக் கவண்கற்களாக உபயோகப்படுத்துகிறார். அந்தக் கற்கள் வருணாசிரமத்தைக் தாக்குகின்றன. அது யாருக்குச் சொந்தமான கோட்டையாயிருந்தால் என்ன? அது யாருக்குச் சொந்தமான கொத்தளமாயிருந்தால் என்ன? தாக்கட்டும், தகர்க்கட்டும் என்கிறார். அந்தக் கோட்டைக்குச் சொந்தக்காரர் யார் என்று பார்க்கிறார்; அவர்களைத் தாக்குகிறார்.

கன்னையா கம்பெனி நாடகம் நடக்கிறது. ராஜபார்ட் வேஷத்தில் உள்ளவனின் ராகம் ரசிக்கவில்லை. தொண்டை கட்டிய காரணத்தால் உடனே நாடகத்தைப் பார்ப்பவர்கள் 'உள்ளே போ என்று கூச்சல் போடுகிறார்கள்; போய்விடுகிறான். நாடகம் முடிந்து வெளியே போகிறவர்கள் என்ன பேசிக் கொள்வார்கள்? 'கன்னையா கம்பெனி மோசம் என்பார்கள். ராஜமாணிக்கம் பிள்ளை நாடகம் நடக்கிறது. நடிகர்களின் திறமையாலோ அல்லது விளக்குகளின் மினுமினுப்பாலோ உட்கார்ந் திருப்பவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது, நாடகம் முடிந்து வெளியே போகிறவர்கள் என்ன பேசிக்கொள்வார்கள்? ராஜமாணிக்கம் கம்பெனி நன்றாயிருக்கிறது என்பார்கள்.

எப்படித் தொண்டை கட்டிய நடிகன், கம்பெனிக்குச் சொந்தமானதால் கன்னையா கம்பெனி பழிப்புக்கிடமாகிறதோ, அதுபோல, வருணாஸ்ரமக் கொடுமைக்கு ஜாதீயக் கொடுமைக்குச் சொந்தக்காரர்களாய் இருப்பவர்கள் பழிப்புக்கு இடமாகிறார்கள்.

ஜாதீயக் கொடுமையின் மேல் எந்தச் சிலாசாசனம் பொறிக் கப்பட்டிருக்கிறது? யாருடைய முத்திரை மோதிரம் போடப் பட்டிருக்கிறது? யாருடைய முத்திரை மோதிரம் போடப் பட்டிருக்கிறது என்று பார்த்த நேரத்தில் ஒரு வகுப்பாரின் முத்திரை மோதிரம் தெரிந்தது. தெரிந்ததால் தான், நாமும் நமது கவியும் ஆரியத்தைத் தாக்குகிறோம், காரணத்தோடு. பார்ப்பனர்கள் எனது ஆருயிர் நண்பர்கள்; எப்படியிருந்தால்? பார்ப்பனர்கள் மாத்திரம் தங்களுடைய குறையை நீக்கிக் கொள்வார்களானால், இந்தப் பாரில் பார்ப்பன தோழர்களைப்போலப் பரம திருப்தியாளர்கள் யாரும் எனக்கு இருக்க முடியாது.
தள்ளவேண்டிய சுயநலம் தன்னை நீக்கிக் கொள்ளக் கொஞ்சம் தன்னலமற்ற தன்மை வேண்டும்; புதுமைக் கருத்து வேண்டும்; துணிவு வேண்டும்; அஞ்சா நெஞ்சம் வேண்டும். புதுச்சேரியிலே வைதிகர்களைக் திட்டுகிறார்களென்றால், பயப்படாமல் போய், ஏன் என்று பார்க்க வேண்டும். காக்கை குருவி எங்கள் குலம் என்று பாரதி பாடிய இந்த நாட்டிலே, சூத்திரர்கள், மனிதர்கள் எங்கள் குலம் என்று சொல்வதற்கு இன்று அஞ்சுகிறார்கள் என்றால், நாங்கள் வீசுகிற குண்டு எந்தக் கோட்டை மீது வீழ்ந்தாலென்ன? அதிலிருந்து வெளிவரும் விஷவாயுக்கள் – நச்சு வாடைகள் - முடக்கு வாதங்கள் ஒழிய வேண்டும். பார்ப்பனத் தோழர்கள் மாத்திரம் நம்முடன் கைகோர்த்துக் தோளுடன் தோள் இணைந்து, நாம் "ஜாதியை ஒழிப்போம்" என்று எழுதியும், பேசியும் செயலிலே காட்டியும் வருவதுபோல் வரட்டும். வராவிட்டால் சும்மா இருக்கட்டும். எதிர்க்காமலாவது இருக்கட்டும். எதிர்க்காமல் இருக்க முடியவில்லையென்றால் ஏளனம் செய்யாமலாவது இருக்கட்டும்; ஏன் என்று கேட்காமல் எதையாவது செய்யட்டும் என்று கூறட்டும். பாருங்கள்! பத்து வருடத்தில் ஜாதி ஒழிகிறதா, இல்லையா என்று! கவி கண்ட கனவு நனவாகிறதா, இல்லையா என்று.

<u>அறிவுகெட்ட தமிழகம்</u>

எங்கே - எடுத்துக் கொள்ளுங்களேன், ஒரு பத்திரிகை "பகவத் கீதையிலே நாலு சாதி இருக்கவேண்டும்" என்று பரமாத்மா கூறியிருக்கிறார் என்று எழுதும். "அது யார் சொன்னது? பகவத் கீதையிலே சாதிக்காதாரமில்லை" என்று ஒரு பேப்பர் எழுதும், மற்றொரு பேப்பர், "நீங்கள் கீதையை வேறு விதமாக அர்த்தம் பண்ணிவிட்டீர்கள்!" என்று செந்தமிழ்ச் செல்வி தீட்டும். அறிவுகெட்ட தமிழகம் எதைத்தான் நம்பும்? கீதையை நம்புமா? தனிப்பட்டவர்கள் சொல்லும் தத்துவார்த்தத்தை நம்புமா?

அலங்காரமான உடை
ஆனால் ஆபாசமான கருத்து

காலையில் நான் ரயிலில் வரும்பொழுது, நான் வந்த கம்பார்ட்மெண்டில் ஒரு கல்லூரி மாணவர், திருச்சி செயிண்ட் ஜோசப்பில் வேதாந்தம் படிக்கிறவர்; இரு பார்ப்பனப் பண்டிதர்களிடம் தர்க்கம் பண்ணிக் கொண்டு வந்தார். மாணவர், அந்த ஐயர்களைப் பார்த்து, ‘வினை என்கிறார்களே, அதைப் பற்றி விதண்டாவாதக்காரர்கள் சில சமயங்களில் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் என்றார். உடனே பண்டிதர்கள் கேட்பதற்குப் பதில் சொல்லாமல், "நீங்கள் கல்லூரியிலே படிக்கிறேன் என்கிறீர்களே, சாப்பாடு எங்கேயோ? என்று மாணவரைக் கேட்டார்கள். மாணவர் அதற்கு பிராமணர்களுக்கெல்லாம் நம் ஹாஸ்டலிலே தனி இடம் உண்டு. அங்கேதான் சாப்பாடு என்றார். நெற்றியிலே இல்லாவிட்டாலும், உடனே மாணவன் பிராமணண் என்று தெரிந்து கொள்கிறார்கள். மாணவன் நெற்றியிலே நீறில்லை; கல்லூரியிலே படிக்கிறவர்; அதுவும் வேதாந்தம் படிப்பு படிக்கிறார்; இங்கிலீஷ்காரனும் பார்த்துப் புதுமாதிரி என்று கற்றுக் கொள்வான். அவ்வளவு அழகாகக் கிராப்பை வாரி விட்டிருக்கிறார். அலங்காரமான உடைதான்; ஆனால் ஆபாசமான கருத்துக்கள் மாணவன் பிராமணன் என்று தெரிந்து கொண்ட பிறகுதான் 'சரி விவாதிக்கலாம்' என்கிறார்கள்.

விவாதம் ஆரம்பமாயிற்று மாணவன் கேட்டான், "ஒருவன் கஷ்டப்படவும் இன்னொருவன் சுகப்படவும் காரணம் என்ன?" என்று. அதற்கு அவனவன் செய்த பாவபுண்ணியம் என்று பதில் அளித்துவிட்டு மாணவனை நோக்கி, "சரி தம்பீ? ஒருவன் 60-ம், இன்னொருவன் 40-ம், மற்றொருவன் 20-ம் மார்க்குகள் வாங்கக் காரணம் என்ன?" என்கிறார்கள். அவன் பண்டிதர்கள் மொழியிலேயே அவாளவாள் படித்த படிப்புக்குத் தக்கவாறு" என்றான். பண்டிதர்கள் "இதைப்போலத்தான் சுகத்தையும் கஷ்டத்தையும் அவாளவாள் செய்த பாவ புண்ணியத்திற்குத் தக்கவாறு அடைகிறார்கள்" என்று எடுத்துக்காட்டினார்கள். அவர்கள் விவாதிக்கத் தர்க்க சாத்திரம் தேவையில்லை. வேதாந்தங்களே உதாரணம்; கதைகள் மூலம்தான் விளக்குவார்கள். 'சரி அதிருக்கட்டும்' என்று சற்று நேரம் கழித்து மாணவன், "இந்த ஜென்மத்தில் அனுபவிப்பது போனஜென்மத்தில் செய்த பாவம், போன ஜென்மத்தில் கஷ்டத்தை அனுபவிப்பதற்கு, அதற்கு முந்திய ஜென்மத்தில் செய்த பாவம்; என்று இப்படியே அதற்கு முன் ஜென்மம், அதற்கு முன் ஜென்மம் என்று போய்க் கொண்டேயிருந்தால் முதல் ஜென்மத்திலே

செய்த பாவத்திலே கொண்டு போய்விடும். அந்த ஜென்மத்தில் பாவம் செய்ததற்கு யார் குற்றவாளி? படைக்கும்பொழுதே பாவத்தைச் செய்யாதபடி யல்லவா ஆண்டவன் படைத்திருக்க வேண்டும்? அது இல்லாமல், பாவம் செய்யும்படியே படைத்துவிட்டு, "பாவம் ஏன் செய்தாய்?" என்று கண்டிப்பது ஒரு குற்றம்; பாவம் செய்யாமல் படைக்காதது இன்னொரு குற்றம்; ஆகவே நாம் செய்கிற பாவத்திற்குக் குற்றவாளி பரமன்தான் என்று சொல்கிறீர்களா? ஜென்மம் என்பது உண்டா? அப்படியிருந்தால் முதல் ஜென்மத்திற்கு முன் என்ன நடந்தது, என்று யாராவது கேட்டால் என்ன பதிலளிப்பது, என்றான்.

பண்டிதர்கள் கொஞ்சம் முறைத்துப் பார்த்தார்கள். "ஜென்மம் என்று ஒன்று உண்டா என்று கூடவா கேட்கிறீர்கள்? நம்பிக்கையிலிருந்துதான் வாதமே எதுவும் தொடங்க வேண்டும். முதல் ஜென்மம் இருந்தது என்று தான் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முந்திய விவரங்கள் சொன்னால் புரியாது. அதிருக்கட்டும். "இந்தப் பிரச்சனை யெல்லாம் யார் கிளப்பி விட்டது? ஈரோட்டு நாயக்கராகத்தான் இருக்கும். இவர்களெல்லாம் பெரியார்களாம். ஒரு கட்சியின் தலைவர்களாம்" என்று பேச ஆரம்பித்து, விவாதத்திலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். இது நான் காலையில் ரயிலில் கண்ட காட்சி.

இதுபோல் இன்னும் வருணாசிரமம் தாண்டவ மாடினால், அதை ஆதரித்துக் கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும் எழுதினால், இந்தச் சாதி மட்டம் அந்தச் சாதி உசத்தி என்று சாதி மட்டக்கோலை நாம் வைத்திருக்கும் வரையில், வேண்டுமென்றே ஒரு கட்சியையும், கட்சியின் தலைவரையும் தூற்றுகிற வரையில், இந்த நாடு நற்கதியடைய மார்க்கமில்லை.

## யாருக்கு வெட்கம், அணுகுண்டு சகாப்தத்திலே?

வைதிகத்தையும், மூடப்பழக்கத்தையும் வளர்க்கும் மாகாமகத்திற்குப் போகாதே என்று. சுயமரியாதைக்காரன் சொன்னான் என்பதற்காகக் கல்கி, மகாமகக் குளத்தையும், அங்குக் குழுமியிருந்த மக்களையும் படம் பிடித்துக் காட்டி, "இதோ பாருங்கள். சுயமரியாதைக்காரன் காட்டுக் கூச்சல் போடுகிறானே. எவ்வளவு கூட்டம் இந்த நெருக்கடியான காலத்திலும்? இதிலிருந்து அவர்களுக்குப் பிரசாரபலமில்லை என்று தெரிகிறதல்லவா?" என்பதன் மூலம் சுயமரியாதைக்காரனுக்கு வெட்கம் என எழுதியது. யாருக்கு வெட்கம்? முதலில் கல்கி ஆசிரியர் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை மறந்துவிடுகிறார். இந்த அணுகுண்டு சகாப்தத்திலே, அழுக்கு நீரிலே குளித்தால் ஆண்டவனுடைய அருளைப்

பெறலாம் என்பதை ஆதரிப்பது போலல்லவா நமது படம் இருக்கிறது என்று அவமானப்பட வேண்டியவர் அவர்தான்.

ஆகவே, எதையும் சுயமரியாதைக்காரன் சொன்னான் என்பதற்காக எதிர்க்காமல், மகாமகம் மடமையை வளர்க்கிறது என்றவுடன், தினமணி ஆதரித்து எழுதட்டும், சுதேசமித்திரன் தலையங்கம் தீட்டட்டும்; ஹிந்து எழுதட்டும்; வேண்டு மென்றால் மதராஸ் மெயில் மாத்திரம் மகாமகத்தை ஆதரிக்கட்டும்; இந்த நாட்டில் எவ்வளவு காலம் அறியாமை நீடித்திருக்குமோ, அவ்வளவு காலம் அவர்களுடைய அந்நிய ஆட்சி நீடித்திருக்கும் என்பதற்காகப் பத்து வருடம் சுயமரியாதைக்காரன் சொல்வதை ஏற்று எழுதட்டும்; எழுதாவிட்டாலும் எதிர்க்காமலிருக்கட்டும். பாருங்கள் பத்து வருடத்திற்கு பின் இந்த நாட்டிலே ஜாதி இருக்குமென்று நினைக்கிறீர்களா? அஞ்ஞானம் இருக்குமா? தீண்டாமை இருக்குமா? எல்லாம் போன இடம் தெரியாமல் போய்விடும்.

<u>ஒன்று பட்டாலுண்டு வாழ்வு</u>

பாரதியார்கூட, "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்று கூறினார். இதைச் சொல்லியும் - ஒரு கத்தைக் குச்சியை ஒடிக்க முடியாது; தனித் தனியாயிருந்தால் ஒடித்துவிடலாம் என்று சொல்லியும், பள்ளி மாணவர்களுக்கு ஒற்றுமையின் அவசியம் போதிக்கப்படுகிறது. ஒற்றுமை என்றால் எதற்கு ஒற்றுமை? நெருப்புக்கும் நீருக்குமா? மானுக்கும் புலிக்குமா? பினாயிலுக்கும் தண்ணீருக்கும் பேதமிருக்கும்; ஆனால் அதில் ஒற்றுமையைக் காணுதல் என்றால் முடியுமா?

<u>வேற்றுமையில் ஒற்றுமை</u>

இந்து முஸ்லிம் ஆகிய இருபெரும் சமுதாயங்கள் பல துறைகளிலே வேற்றுமையைக் கொண்டவை. அவற்றில் ஒற்றுமை என்றால் ஏற்படுமா? வேற்றுமையிலே ஒற்றுமை காட்டு, அது தர்க்கத்துக்குரியது. மாணவர்கள் கேள்வித்தாளுக்குரியது. நாட்டுக்குரியதா? நாட்டிலே நடவாது. அதை உத்தேசித்துத்தான் நமது புரட்சி கவிஞர், இன்று உலகம் பொதுவுடமை பேசுவதைக் கடுமையாகக் கண்டிக்கிறார்; இனம் கலந்தால் இடராறும் என்கிறார், சனாதன ஊற்றைத் தூர்க்க வேண்டும் என்கிறார். வருணாஸ்ரமத்தின் வாயிற்படியை அடை என்கிறார். வேதாந்தம் சித்தாந்தம் எல்லாம் வேலை ஒழிந்த நேரத்தில், ஆண்டிகள் விவாதிக்க வேண்டிய பொருள். கொலை வாளை எடு. முதலில்

கொடியோர் செயலை அறவே ஒழிப்போம் என்றும், மகாராசர்கள் உலகாளுவதா என்றும் கேட்கிறார்.

கொலை வாளினை எடு

அந்தக் காலத்திலே கஷ்டம் ஏற்பட்டால், 'இட்ட முடன் என் தலையில் இன்னவாறு என்றெழுதி விட்ட சிவனும் செத்து விட்டானோ. முட்டப் பஞ்சமே வந்தாலும் பாரமவனுக்கே' என்று பாரம் பழிகளை 'அவன்' மேல் சுமத்தினார்கள்; பதிலை எதிர்பார்க்காமல் இடைக்காலத்தில், 'கேட்டவரம் அளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள், கூட்டோடு எங்கே குடிபோனீர்' என்று கடவுளைப் புலவர்கள் தேட ஆரம்பித்தார்கள். ஆனால் பாரதிதாசனோ, "கடவுளைக் காண முடியவில்லை. ஆகையால் கடவுள் வந்து கடுங்கோலர்களைத் தண்டிப்பார் என்று நினைக்காதே; கொலை வாளினை எடடா; நாம்தான், அந்த மதோன்மத்தர்கள் மண்டையிலே அடிக்க வேண்டும்" என்கிறார். அந்தக்கால மக்கள் 'கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில், கடும் புலிவாழும் காடு நன்றே' என்று அரண்மனையைவிட ஆரண்யமே மேல் என்று ஆரண்யம் புகுந்தார்கள், அரசாட்சியைப் பற்றிக் கவலைப்படாமல்.

பாரதியார் வந்தார் "தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று அழகாக அரசியலைத் தாக்கச் சொன்னார் மக்களை. ஆனால், பாரதிதாசனோ, கொலை வாளைக் கையில் கொடுத்து நேரே நம்மைக் களத்திலே கொண்டு வந்து நிறுத்துகிறார்.

காதலும் வீரமும்

பாரதிதாசன் தென்றலைப் பற்றியும், தமிழைப் பற்றியும் வீரத்தைப் பற்றியும்தானே பாடினார்; காதலைப் பற்றிப் பாடியிருக்கிறாரா என்றால்
வேண்டிய மட்டும் பாடியிருக்கிறார்; அவர் கவிதைப் பகுதிகளில் எந்தப் பகுதியைப் படிக்காவிட்டாலும் காதல் பகுதியைப் பற்றி யாரும் படிக்காமலிருக்கமாட்டார்கள் என்பதற்காக, நான் காதலைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. காதலையும் வீரத்தையும் பாடும் படியும், பாடி ஆடும்படியும், அதை இசையிலே காட்டும்படியும், அவரது காவியங்களும் கவிதைகளும் சொல்லுகின்றன. தமிழ் நாட்டிலே காதலைப் பற்றியும் வீரத்தைப் பற்றியும் புலவர்கள் அதிகம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் காரணம், தமிழ் நாட்டின் இயற்கை எழில். இங்குச் சுற்றிப் பார்த்தால், இங்கிலாந்தில் காணப்படுவது போலச்

சுண்ணாம்புக் குன்றுகள் தோன்றா; அழகிய குன்றுகளுக்குப் பக்கத்திலே சாலைகள்; சாலைகளுக்குப் பக்கத்திலே சோலைகள்; வற்றாத ஜீவநதிகளுக்குப் பக்கத்திலே அவை பாய்கின்ற நன்செய்கள்; நன்செய்களிலே நிற்கும் பஞ்சை உழவர்கள்; அந்த உழவர்கள் பாடும் பள்ளு; அந்தப் பள்ளு நெஞ்சை அள்ளும் விதம். இந்தக்கவின் பொருந்திய காட்சி தமிழனுக்குக் காதலை ஊட்டுகிறது. காட்டை நாடாக்கியிருக்கிறார்கள். ஒரு காலத்திலே, விந்திய மலைக்குத் தெற்கே காடாயிருந்ததைப் பிற நாட்டார் கண்டு மெச்சத் தகுந்த அளவு மட்டுமல்ல, பொறாமைப் படும் அளவுக்கு அழித்து நாடுகளும் வீடுகளும் அமைத்திருக்கிறார்கள். வியாபாரத்திலே தழைத் தோங்கி இருக்கிறார்கள். வீரத்திலே திளைத்திருக்கிறார்கள். இன்னும் வீரம் போற்றப்படுகிறது போர்க்களங்களிலே!

தமிழனுடைய வீரம் மங்காதிருக்கக் காரணம், தமிழனுடைய வீரத்திற்கும் பிறருடைய வீரத்திற்குமிருந்த வித்தியாசமே. தமிழன் என்றும் அக்கினியாஸ்திரம் உபயோகித்த தில்லை; பாசுபதத்தைப் பயன்படுத்தியதில்லை. அவனது ஆயுதங்கள் அவனிரு பருத்த தோள்கள். இடையிலே வாள்; வாள் ஏந்தக் கை; கைக்கேற்ற கருத்து; கருத்துக் கேற்ற களம்; களத்துக்கேற்ற காட்சி; அங்குப் பிணக்குவியலைக் கண்டு பயப்படாத காட்சிக் கேற்ற கம்பீரம். கனக விசயரைக் கைது செய்ய கங்கைக்கரைக்குச் சென்றான் சேரன் செங்குட்டவன் என்றால், சென்றான் வீரர்களுடன்; வீரர்கள் சென்றனர் வாள்களோடு; திரும்பினர் வெற்றியோடு, அன்று ஆரியம் தாள் பணிந்தது வாளுக்காக. சேரன் செங்குட்டவன் வெற்றி பெற்றான் என்றால், ஐயனுடைய அருளாலல்ல; மழையைப் பொழியும் வருணாஸ்திர மில்லாமல், அழிக்கும் அக்கினியாஸ்திரம் இல்லாமல், சேரன் சண்டையில் வெற்றி பெற்றான்.

இந்த அஸ்திரங்கள், குலோத்துங்கன் இராசராசன், போன்றவர்கள் பர்மா மீது படையெடுத்த போதும் பிற நாடுகளைப் பிடித்த போதும் உபயோகப்படவில்லை. உபயோகப்பட்டதாகச் சான்றுகளில்லை; தமிழர்களுக்கு ஒரு வீசை இரும்பு; ஒரு சிறிய உலைக்கூடம்; கொஞ்சம் மூளை இவை இருந்தால் போதும், வாள் வடிக்க. வாள் வடித்து விட்டார்களானால், அவர்களுக்கு முன்னேயே இருக்கின்ற அஞ்சாநெஞ்சமும், அருமைக் கையும் போதும். பர்ண சாலைகள் அமைக்க வேண்டியதில்லை; நிகும்பல யாகங்கள் ஏதும் செய்ய வேண்டியதில்லை; ஐயனின் அருளைப் பெற. எப்பொழுது அம்மையும்

அப்பனும் சண்டை சச்சரவுகளில்லாமலிருக்கிறார்கள் என்ற நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டியதில்லை. அந்த மாதிரியான தமிழனின் வீரத்தைஅழகாகப் பாடியுள்ளார் பாரதிதாசன்.

பாரதிதாசன்

பாரதிதாசன் பாக்கள், தமிழனின் வீரத்தையும் காதலையும் நினைவூட்டும்; பாரதிதாசன் படம் அதற்கு உறுதுணையாயிருக்கும். பாரதிதாசன் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து அவருக்குப் பாராட்டுதல் செய்வதற்கும்; செய்வதற்குக் காரணாமாயிருந்தவர்களுக்கும், இப்பணியைத் தொடங்கிய அருமை மாணவர்களுக்கும் உறுதுணையாக நின்று பேராதரவு அளித்த பேராசிரியர்களுக்கும் எனது வணக்கம். அவர்களை நன்றாக, மனமார வாழ்த்துகிறேன். பாரதிதாசன் முகத்திலே அமைதி தவழாது; அதற்குப் பதிலாக புரட்சி வாடை வீசும். கோபம் ஜ்வாலை வீசும். திரு. வி. க. ஆண்மையில் பெண்மை காணுவது போலக் காண முடியாது. அவரது முகத்திலே மீசை கறுத்து முறுக்கேறியிருக்கும். அவருடைய முகத்திலே யோகத்தின் சின்னங்களைக் காண முடியாது. தியாகத்தின் தழும்புகளைக் காணலாம். அவர் அண்மையிலே புதுவையில் சிலரால் காலித்தனமாகத் தாக்கப்பட்டார். ஆனால், புதுவையில் பட்ட தியாகத் தழும்புகள் இந்தப் படத்திலே தெரியாது. அந்தத் தியாக மூர்த்தியின் திருவுருவப் படம் தமிழ்நாடு எங்கணும், மாட மாளிகைகளிலே, மாடமாளிகை மட்டுமல்ல; மண் குடிசைகளிலே, மண் குடிசைகளிலே மட்டுமல்ல; மக்களுடைய மனத்திலேயும் பிரகாசிக்க வேண்டும். அவரது ஆவேசம் எல்லாருக்கும் உண்டாகுமாக; அவரது ஒவ்வொரு கவிதையும் இந்நாட்டின் விடுதலைக்காக வெடி குண்டுகளாகுமாக! அவரது ஒவ்வொரு கவிதையும் ஒரு ரூசோவாக மாறுமாக! அவரது ஒவ்வொரு கவிதையும் ஒரு வால்டேராக மாறுமாக!

ஏ தமிழ்நாடே! ஏ தாழ்ந்த தமிழ் நாடே! தேய்ந்த தமிழ் நாடே! தன்னை மறந்த தமிழ் நாடே! தன்மானமற்ற தமிழ் நாடே! நன்றிகெட்ட தமிழ்நாடே! கலையை உணராத தமிழ் நாடே! கடவுளின் லட்சணத்தை அறியாத தமிழ் நாடே! மருளை மார்க்கத்துறை என்றெண்ணிடும் தமிழ் நாடே! ஏ, சோர்வுற்ற தமிழ் நாடே! வீறுகொண்டெழு! உண்மைக் கவிகளைப் போற்று! உயிர்க் கவிகளைப் போற்று! உணர்ச்சிக் கவிகளைப் போற்று! புரட்சிக் கவிகளைப் போற்று! புத்துலகச் சிற்பிகளைப் போற்று!!!

என்று கூறி, உங்கள் அனைவரின் சார்பாகவும், பெருமையுடனும்,

மகிழ்ச்சியுடனும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களது படத்தைத் திறந்து வைக்கிறேன்.